பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 கார்த்திகை 25 சனிக்கிழமை (10.12.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 14

# 'பானூஸ்' புயல்காற்று இன்று அதிகாலை குடாநாட்டின் அருகாக கரையை கடக்கிறது!

யாழ்ப்பாணம்,டிசெ.10

யாழ்ப்பாணத்துக்குக் கிழக்கே 150 கிலோ மீற்றர் தொலைவில் மையம் கொண்டிருந்த 'பானூஸ்' புயல்காற்று இன்று அதிகாலை அங்கிருந்து நகர்ந்து குடாநாட்டின் வடக்குக் கரையோரம் மேலாகக் கரையைக் கடந்து கொண்டிருந்தது.

இதனால் பல பகுதிகளிலும் நேற்றுப் பின்னிரவு முதல் பலத்த காற்று வீசிக்கொண்டிருந்தது.

'பானூஸ்'(Fanoos) எனப் பெயரிடப்பட்ட இந்தப் புயற்காற்று சூறாவளியை விட பலத்த சேதங்களை ஏற்படுத்தக் கூடிய 'புயல் கிளம்பல்' என்றும் இதன் நகரும் திசை, வேகம் என்பன திடீர் திடீர் என்று மாற்றமடையக்கூடியவை என்பதால் அவற்றை மதிப்பிடுதல் கடினம் எனவும் வானிலை அவதான நிபுணர் ஒருவர் தகவல் வெளியிட்டார்.

யாழ்ப்பாணத்துக்குக் கிழக்காக நிலைகொண்டிருந்த இந்தப் புயல் ஆரம்பத்தில் அங்கிருந்து மேற்கு நோக்கி நகர்ந்ததால் யாழ்ப்பாணத்தை ஊடறுத்துச் சென்று அது பலத்த சேதங்களை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் நேற்று நள்ளிரவு வாக்கில் அது கிழக்கில் இருந்து வடமேற்காக நகர்ந்து பின்னர் மேற்கே முன்னேறியது என்று அறிவிக்கப்பட்டது. பருத்தித்துறை, காங்கேசன்துறை பகுதிகளை அண்டி - குடாநாட்டுக்கு மிக அருகாக அது இன்று அதிகாலை கரையைக் கடக்கத் தொடங்கியது.

இதனால் பலத்த காற்று வீசியது; கடல் கொந்தளித்தது.

நேற்று முழுநாளும் நிலவிய மப்பும் மழையுமான காலநிலை இந்துமா சமுத்திரத்தில் உருவாகிய இந்தப் புயல் மையத்தினால் ஏற்பட்டது என்று அறிவிக்கப்பட்டது.

இன்று அதிகாலை இந்தச் செய்தி அச்சுக்குப் போகும்போது சுமார் 15 கிலோமீற்றர் வேகத்தில் புயல்காற்று கிழக்கில் இருந்து வட

(16ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தநிறுத்தம் அமுலாக்கப்படுவதை உறுதிப்படுத்தும் சந்திப்பே அவசரம்

## தமிழ்ச்செல்வன் நேற்றுத் தெரிவிப்பு நோர்வேத் தூதரைச் சந்தித்த பின்னர்

கிளிநொச்சி,டிசெம்பர்10

"யுத்தநிறுத்த உடன்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அம்சங்களை ஒழுங்காக நடைமுறைப்படுத்தினாலேயே எல்லா நிலைமைகளையும் சுமுகமாக்கிவிடலாம்.

"ஆகவே, இந்த உடன்பாடு பலவீனமுற்று, தகர்ந்து போகும் நிலைக்கு அனுமதிக்காமல் அதை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான உயர்மட்டச் சந்திப்புகளை அவசரமாகவும், அவசியமாகவும் முன்னெடுக்க வேண்டும். அதை விடுத்து உடன்படிக்கையை மாற்றமுயல்வது ஏற்றுக்கொள்ளமுடியாதது."

- இப்படிக் கூறியிருக்கின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தலைமையிலான நோர்வேத் தூதரகக் குழுவை தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் குழுவினர் நேற்றுக்காலை கிளிநொச்சியில் சந்தித்தனர்.

காலை 10 மணி முதல் 11.30 மணிவரை இந்தச் சந்திப்பு நடைபெற்றது. அதன்பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த போதே தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அப்போது அவர் அளித்த பேட்டியின் முழுவிவரம் வருமாறு:-

**கேள்வி :-** இன்றைய சந்திப்புக் குறித்து...?

**பதில்:-** வழமையாக நோர்வேக் குழுவைச் சந்திக்கும் சந்திப்பாக இருந்தாலும், புதிய அரசு பதவியேற்றுள்ள நிலையில் -

(13 ஆம் பக்கம் பார்க்க)

## அனுசரணைப் பணியாற்ற நோர்வே புலிகளுக்கும் அரசுக்கும் நிபந்தனை!

கொழும்பு,டிசெ.10

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான அமைதி நடவடிக்கைகளில் அனுசரணைப் பணி வகிப்பதற்கு மீண்டும் அழைக்கப்பட்டுள்ள நோர்வே, அந்தப் பணியை முன்னெடுப்பதற்கு இலங்கை அரசு மற்றும் புலிகள் ஆகிய இரு தரப்புக்குமே முன்நிபந்தனை விதித்திருப்பதாக அறிய வருகின்றது.

அனுசரணைப் பணியை மீள ஆரம்பிப்பது தொடர்பில் கடந்த புதனன்று கொழும்புக்கான நோர்வேத் தூதரகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், இலங்கை அரசுத் தரப்புக்கு நிபந்தனை விதிக்கப்பட்டிருப்பது சாடைமாடையாக வெளிப்பட்டிருந்தது என்பது தெரிந்ததே.

இவ்வாறு முன்நிபந்தனை விதிக்கப்பட்டிருப்பதை நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும், இலங்கை சமாதான முயற்சிகளுக்கான அனுசரணைப் பணிக்கான

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகரில் ஜனாதிபதியின் கொடும்பாவி

யாழ்ப்பாணம்,டிசெ.10

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கொடும்பாவி நேற்று நண்பகல் யாழ்.நகரில் மாணவர்களால் எரிக்கப்பட்டது.

பிரேத இறுதிச் சடங்கு போன்ற பாவனையில் கொடும்பாவியை மாணவர்கள் சுமந்து வந்து மழைக்கு மத்தியில் வீதியில் தீக்கிரையாக்கினர்.

முதலில் யாழ். இந்துக் கல்லூரிப் பகுதியில் இருந்து மஹிந்த ராஜபக்ஷவின் கொடும்பாவி ஊர்வலமாக யாழ்.நகரின் பெரும்பாலான பகுதிகளுக்கும் இழுத்துச்செல்லப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸாரின் எச்சரிக்கை வேட்டுகளால் பதற்றம்

யாழ்ப்பாணம்,டிசெ.10

வாகன ஆவணப் பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலீஸார், வீதியில் சென்றமோட்டார் சைக்கிள் ஒன்றை வழிமறித்தவேளை அதனைச் செலுத்தியவர் நிறுத்தாமல் சென்றதையடுத்து எச்சரிக்கை வேட்டுக்களை சரமாரியாகத் தீர்த்தனர்.

நேற்று நண்பகல் நல்லூர் கைலாயபிள்ளையார் கோயில் சந்தியில் படையினருடன் இணைந்து பொலீஸார் வாகனங்களின் ஆவணங்களைப் பரிசோதனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அச்சமயம் யாழ். கோவில் வீதிவழியாக மோட்டார் சைக்கிள் ஒன்றில் தலைக்கவசம்

(16ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தம் வராது; அப்படி யுத்தம் மூளுமானால் புலிகளைத் தோற்கடிக்க முப்படைகள் தயார்!

## தளபதிகள் நேற்றுச் சூளுரை

கொழும்பு,டிசெ.10

"தற்போதைய அமைதி முயற்சிகள் குலைந்து யுத்தம் வெடிக்குமென நாம் எதிர்பார்க்கவில்லை. ஆனால், அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் அதனை முகங்கொடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளை யுத்தகளத்தில் முறியடிக்கத் தயாராக இருக்கின்றோம்."

- இப்படி இலங்கைப் படைகளின் உயர் தளபதிகளும், கூட்டுப்படைகளின் தளபதியும் மற்றும் பொலீஸ்மா அதிபரும் நேற்று கூட்டாக சூளுரைத்தனர்.

கூட்டுப்படைகளின் தளபதி அட்மிரல் தயா சந்தகிரி, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா, விமானப் படைத்தளபதி ஏயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா, பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ ஆகியோர் நேற்று ஒன்றாக பத்திரிகையாளர்களைச் சந்தித்தனர். அப்போதே கூட்டாக அவர்கள் இவ்வாறு சூளுரைத்தனர்.

இந்தச் சந்திப்பில் கடற்படைத் தளபதி வியர் அட்மிரல் வஸந்த கரன்னாகொட கலந்துகொள்ளவில்லை.

கொழும்பில் அரச தகவல் திணைக்களத்தில் இந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது.

"நாங்கள் மிக மோசமான யுத்தங்களையெல்லாம் சந்தித்திருக்கின்றோம். அப்போதைய நிலைமையுடன் ஒப்பிடுகையில் இப்போதைய நிலைமை மிக அற்பமானது. ஆனால், நாங்கள் கண்டபடி சுட்டுத்தள்ளுவதில் ஆர்வம் கொண்டவர்கள் அல்லர்." - என்றார் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா.

"யுத்த நிறுத்த ஒப்பந்தமா அல்லது யுத்தமா என்று கேட்டால் நாம் இப்போதைய நிலையில் யுத்த நிறுத்தத்தையே விரும்புவோம். ஆனாலும் எந் நிலைமையையும்

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்







யாழ்.நகரப் பகுதியில் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கொடும்பாவி எரிக்கப்பட்டது. மாணவர்கள் கொடும்பாவியை பிரேத ஊர்வலம் போன்று எடுத்து வந்து மழைக்கு மத்தியில் வீதியில் தீக்கிரையாக்கினர். அப்போது எடுக்கப்பட்ட படங்கள்.

*(படங்கள் : பிரேம், பகீர்)*

## மறவன் மாஸ்ரரின் நினைவு தினம் நாளை

புதுக்குடியிருப்பு,டிசெ.10

முல்லைத்தீவு மாவட்ட நுண்கலைக் கல்லூரி செயற்படுத்தும் பாரம்பரிய கூத்துக் கலைஞர் லெப்.கேணல் மறவன் ஆசிரியரின் ஓராண்டு நினைவுநாள் நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.

இதில் தமிழீழத் தேசியக் கொடியேற்றல், நினைவுப் பேருரைகள், சிறப்புரைகள் மற்றும் பாரம்பரியக் கலை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. (த-6-353)

## வாழ்வாதார உத்தியோகத்தர் பதவிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.10

யாழ்.மாவட்டத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை- மேம்பாட்டை - முன்னெடுக்கும் வகையில் வாழ்வாதார உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு யாழ்.அரச செயலகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

பருத்தித்துறை, மருதங்கேணி, சண்டிலிப்பாய் மற்றும் ஊர்காவற்றுறை ஆகிய பிரதேசங்களில் வெற்றிடமாகவுள்ள இந்த வாழ்வாதார உத்தியோகத்தர் பதவியில் பட்டதாரிப் பயிலுநர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதில் இணைந்துகொள்ள விரும்பும் பட்டதாரிப் பயிலுநர்கள் தமது சுயவிவரங்களுடன் உடனடியாக யாழ்.செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமியுடன் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் கேட்டுள்ளார். (ஐ-6)

## சாயி வெளியீடும் இளைஞர் ஒன்றுகூடலும்

யாழ்ப்பாணம்,டிசெ.10

பகவான் பாபாவின் 80 ஆவது வருட நிறைவு நூல் வெளியீடும் சாயி இளைஞர்களின் ஒன்றுகூடல் நிகழ்வும் இன்று சனிக்கிழமை 8.40 மணிக்கு திருநெல்வேலி சேர் பொன். இராமநாதன் வீதியிலுள்ள பகவான் ஸ்ரீ சத்திசாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளன.

'ஆன்மீக வாழ்க்கைக்கு உகந்த உணவு' என்னும் பொருளில் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் கருத்துரை வழங்குவார்.

தொடர்ந்து விசேட மலர் வெளியீடும் இடம்பெறும். நூல்களின் அறிமுக உரையை திருமதி ஸ்ரீரஞ்சனி சிவபாலனும் ஆய்வுரையை வடக்கு-கிழக்கு மாகாண இணைப்புக் குழுத் தலைவர் நா.புவனேந்திரனும் நிகழ்த்துவர்.

'சாயிகாட்டும் வாழ்க்கை முறை' என்னும் பொருளில் வடபிராந்திய ஸ்ரீ சத்திய சாயி இணைப்புக் குழுத் தலைவர் ஆர். வசந்தசேனன் உரை நிகழ்த்துவார்.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம் பெறும். (எ-204)

### படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் பதற்றம்

# வேட்டொலி கேட்டு மிரண்டது நாய் மோ.சைக்கிளுடன் மோதி விபத்து!

யாழ்ப்பாணம்,டிசெ.10

மருதனார்மடம் பகுதியில் நேற்று படையினரின் வேட்டொலி கேட்டு வீதிக்குக் குறுக்கே மிரண்டு ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதில் அதில் பயணம் செய்தவர் வீழ்ந்து படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் மருதனார்மடம் பகுதியை சிறிதுநேரம் பரபரப்புக்குள்ளாக்கியது.

படையினர் திடீரெனத் தீர்த்த வேட்டுக்களின் ஓசை கேட்ட நாய் மிரண்டு ஓடியது என்று கூறப்படுகிறது. ஆனால், சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்தபோதே வேட்டுக்கள் வெளியேறின என்று ஒரு தகவல் தெரிவித்தது.

கோண்டாவில் பகுதியைச் சேர்ந்தவரான எம்.அருள்சந்திரன்(வயது 36) என்பவரே நாயுடன் மோதுண்டு படுகாயமடைந்தவராவார்.

இவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (ஐ-12-86)

# ஜனாதிபதி, பிரதமரைச் சந்தித்த அகாஷி இன்று கிழக்கு விஜயம்

இலங்கை அமைதி முயற்சிகளுக்கான ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூஷி அகாஷி இன்று கிழக்கு மாகாணத்திற்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

கிழக்கில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ள அகாஷி அங்கு இடம்பெற்றுவரும் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலும் ஆராய்வாரெனக் கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக நேற்று கொழும்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரை அவர் தனித் தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்புகளின் போது இலங்கையின் அமைதி முயற்சிகள் மற்றும் வடக்கு - கிழக்கில் தொடர்ந்து வரும் வன்முறைகள் ஆகியன குறித்து விரிவாக ஆராயப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது.

அமைதி முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான அழைப்பை விடுத்தமைக்காக ஜனாதிபதி மஹிந்தவிடம் தமது வரவேற்பை வெளியிட்ட யசூஷி அகாஷி, இலங்கை அமைதி முயற்சிகளுக்கு இணைத் தலைமை என்ற அந்தஸ்திலிருந்து ஜப்பான் முழுமையான ஒத்துழைப்பை வழங்குமென்றும் உறுதியாகத் தெரிவித்திருக்கிறார்.

தனது இலங்கைப் பயணத்தை முடித்துக் கொண்டு அகாஷி நாளை ஜப்பானுக்குத் திரும்புவாரெனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-க)



ஜப்பானின் விசேட தூதுவர் யசூஷி அகாஷி நேற்று அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.




# திங்களன்று சு.க. கூட்டம் சந்திரிகா தலைமையில்!

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம் அக்கட்சியின் தலைவியும், முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைமையகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் மத்திய குழுவின் அனைத்து உறுப்பினர்களும் தவறாது கலந்துகொள்ளவேண்டுமென்று கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன அறிவித்திருக்கிறார்.

தற்போதைய அரசியல் நிலைமை, சமாதானப் பேச்சுகள் ஆகியன குறித்து இந்தக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தக்கூட்டத்தில் கலந்துகொள்வாரென எதிர்பார்க்கப்படுகின்றபோதும் அது ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை. (ஐ-க)

## மருந்தக வளாகத்தில் கசிப்பு மீட்பு!

வலி.வடக்கு,டிசெ.10

உடுவில் ஆலடிப் பகுதியில் அமைந்துள்ள மத்திய மருந்தக வளாகத்திலிருந்து சுமார் 60 போத்தல் கசிப்பு மீட்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசத்தில் கசிப்பு ஒழிப்பில் ஈடுபட்டு வருகின்ற சிந்து சனசமூக நிலைய உறுப்பினர்களும் அந்தப் பகுதி இளைஞர்களும் கூட்டாக நடத்திய கசிப்பு வேட்டையின் போதே இந்தப் போத்தல்களைக் கண்டுபிடித்து மீட்டு மானிப்பாய் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

கசிப்புப் போத்தல்கள் வைத்தியசாலையின் மலசலக் குழிக்கு அருகில் இருந்தே மீட்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

இச்சம்பவத்தை அடுத்து உடுவில் ஆலடிப் பகுதியில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த பொது அமைப்புப் பிரதிநிதிகளும் இளைஞர்களும் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். (ஐ-6-86)

## சமூக பங்கேற்பு ஆரம்ப விழா

யாழ்ப்பாணம்,டிசெ.10

திருநகர் சமூக அபிவிருத்திச் சபையினால் 'யு.என்.ஹபிற்ராட்' நிறுவன அனுசரணையுடன் நடத்தப்படும் சமூக பங்கேற்பு ஆரம்ப விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு திருநகர் கிராமத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஸும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாநகரசபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம், யாழ்.செயலக தலைமைப்பீட உதவி அரச அதிபர் கே.வீரபத்திரபிள்ளை ஆகியோரும் கலந்துகொள்வர்.

'யு.என்.ஹபிற்ராட்' நிறுவன நகர முகாமையாளர் க.பரமேஸ்வரன் இத்திட்டம் தொடர்பான விளக்கத்தை வழங்குவார். தொடர்ந்து யாழ்.அரச அதிபர்,மாநகர ஆணையாளர் ஆகியோர் வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைப்பர். (எ-203)

## ஹற்றன் நஷனல் வங்கியின் புதிய நிலையம்

யாழ்ப்பாணம்,டிசெ.10

ஹற்றன் நஷனல் வங்கியின் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் யாழ்.மாவட்டத்திற்கான பிராந்திய அபிவிருத்தி நிலையம் எதிர்வரும் 14ஆம் திகதி புதன்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளது.

இப்புதிய அபிவிருத்தி நிலையம் இல.62, 64 ஸ்ரான்லி வீதி என்னும் முகவரியில் அமைந்துள்ள கட்டடத் தொகுதியிலேயே திறக்கப்படவுள்ளது. (ஐ-6)

## செயலமர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.10

பிள்ளை நேயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்றும் நாளையும் ஆறு பாடசாலைகளில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்செயலமர்வு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-12)

## கல்வி அமைச்சின் கடிதம் வாபஸ்

யாழ்ப்பாணம்,டிசெ.10

யாழ். பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினர்களைப் பதவி விலகுமாறு கோரி கல்வி அமைச்சினால் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் வாபஸ் பெறப்பட்டதாக நேற்று துணைவேந்தர் தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் உயர் கல்விப் பிரிவின் மேலதிகச் செயலாளர் மாலினி பீரிஸ், யாழ். பல்கலைக்கழக பேரவையின் தலைவரையும் பேரவை உறுப்பினர்களையும் உடனடியாக ராஜினாமாச் செய்யுமாறு கோரும் கடிதம் ஒன்றை கடந்த 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தருக்கு அனுப்பியிருந்தார்.

கடந்த 23ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி ஜனாதிபதி விடுத்த அறிவுறுத்தலின் பேரில் இக்கடிதம் அனுப்பப்பட்டதாக முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இப்போது திடீரென இக்கடிதம் வாபஸ் பெறப்பட்டதற்கான காரணம் தெரியவில்லை என்று துணைவேந்தர் குறிப்பிட்டார். (ஐ-12)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# தமிழர் போராட்டத்தில் மனித உரிமை

இன்று சர்வதேச மனித உரிமைகள் தினம்.

இனத்தின் இருப்புக்காகவும், சுதந்திரத்திற்காகவும், தமது உரிமைகளுக்காகவும் இரத்தம் சிந்தி, உயிர்க்கொடை வழங்கிப் போராடி வரும் ஈழத்தமிழர்களுக்கு இந்த மனித உரிமைகள் தினம் முக்கியமான நாள்.

தமது விடுதலைப் போராட்டத்தின் மத்தியில் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் மனித உரிமைகளுக்கான குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகி நிற்கும் அமைப்புகளில் தமிழரின் விடுதலைச் சக்தியும் ஒன்று.

தங்களுடைய உரிமைகளுக்காகப் போராடும் தமிழர்களும், அதற்கான அவர்களது போராட்டமும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பயங்கரவாதிகளாகவும், பயங்கரவாதமாகவும் சித்திரிக்கப்படும் அவல நிலையை இன்று காண்கின்றோம்.

*"பயங்கரவாதம் என்ற சொற்பதத்திற்கு ஒரு தெளிவான, தீர்க்கமான வரைவிலக்கணம் இல்லாததால் தர்மத்தின் வழி தழுவி நிகழும் நியாயமான அரசியல் போராட்டங்களும் பயங்கரவாதமாகத் திரிவுபடுத்தப்படுகின்றன. இந்த வகையில் இனவாத ஒடுக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து போராடும் சுதந்திர இயக்கங்களுக்கும் பயங்கரவாதச் சேறு பூசப்படுகின்றது. பயங்கரவாதத்திற்கு எதிரான இன்றைய சர்வதேச எதிர்ப்பியக்கத்தில் அடக்குமுறை அரசுகளின் இராணுவப் பயங்கரவாதம் மூடிமறைக்கப்படுகின்றது. ஆயினும், அந்த அரச பயங்கரவாதத்தை எதிர்த்து நிற்பவர்கள் மீதே பயங்கரவாத முத்திரை குத்தப்படுகிறது."* - இப்படிக் கடந்த மாதம் தமது மாவீரர் தின உரையில் தலைவர் பிரபாகரன் சுட்டிக்காட்டிய மெய்மை நிலை கவனிக்கத்தக்கது.

விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான அரச பயங்கரவாதம் ஒருபுறம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அவசரகாலச் சட்டம் என்பவற்றின் கீழான அடக்குமுறைகள், உரிமை மறுப்புகள் மற்றொரு புறம். இப்படிப் பேரினவாத ஆட்சியாளர்களினால் மேற்கொள்ளப்படும் - மனித உரிமை மீறல்களைக் கண்டும் காணாதது போல விட்டுவிடும் சர்வதேச சமூகம், சட்ட ரீதியான தேசங்கள் என்று கூறிக் கொள்ளும் அமைப்புகளின் மனித உரிமை மீறல்களைக் கண்மூடி, புறமொதுக்கி அங்கீகரித்துக் கொண்டு, மற்றப் பக்கத்தில் இன்னும் தேசத்துக்குரிய அந்தஸ்தை எட்டாத விடுதலை அமைப்புக்களைக் காய்வது அப்பட்டமாக ஒரு பக்கச் சார்பான செயற்பாடாகும்.

உரிமைக்காகப் போராடும் அமைப்புகளை உரிமை மீறலுக்காகக் கண்டிக்கும் உலக வல்லாதிக்க நாடுகளில் முன்னணியில் நிற்கிறது அமெரிக்கா.

சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டம் என்று கூறிக்கொண்டு இந்த 'சர்வதேச பொலீஸ்' புரியும் உரிமை மீறல்கள் இப்போதும் - இன்னும் கூட - புதிது புதிதாக அம்பலமாகிக் கொண்டிருக்கின்றன.

மனித உரிமைகள் குறித்து சுயபிரலாபமாக அதிகம் பீற்றிக் கொள்ளும் அமெரிக்கா, பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டம் என்ற பெயரில் சர்வதேச ரீதியில்தான் கைது செய்த ஆட்களில் ஒரு சாரார் பற்றிய தகவல்களை இன்னும் வெளியிடவேயில்லை என்பதையும், அவர்களை செஞ்சிலுவை சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் பார்க்கக்கூட சந்தர்ப்பம் அளிக்கவில்லை என்பதையும் நேற்று ஒப்புக்கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல, அமெரிக்காவுக்கு வெளியே குவாண்டனமோ சிறைக்கு அப்பால், இது போன்ற மேலும் பல இரகசியத் தடுப்பு முகாம்களில் பலரை அமெரிக்கா தடுத்து வைத்திருக்கின்றது என்ற செய்தி ஓரளவு ஊர்ஜிதமாகும் நிலையும் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. அத்தகைய இரகசிய தடுப்பு முகாம்களில் உள்ளோர் கொடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

இத்தகைய நிலையில் அமெரிக்கா போன்ற - தங்களை ஜனநாயக உரிமைகளை மதிக்கின்ற மேன்மையான தேசங்கள் என்று பிரகடனப்படுத்திக் கொள்கின்ற - நாடுகள் உண்மையான விடுதலைக்கும், சுதந்திரத்திற்குமாகப் போரிடும் அமைப்புகளைப் பார்த்து 'பயங்கரவாத இயக்கங்கள்' என்றும், அடிப்படை மனித உரிமைகளை மீறும் அநாகரிகமான படைகள் என்றும் சித்திரிப்பது வேதனைக்குரியது.

இலங்கையைப் பொறுத்தவரை மனித உரிமைகள் என்பது அதன் அரசமைப்பில் எழுத்தில் பதியப்பட்டிருக்கின்றது.

ஆனால், தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கின்ற - அல்லது அந்த உரிமைகள் மீது தனது மேலாதிக்கத்தைச் செலுத்துகின்ற - பௌத்த, சிங்கள மேலாண்மைத் தனமும் அதே அரசமைப்பினால்தான் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

பௌத்த, சிங்கள மேலாண்மைத் தனம் மீது கட்டுப்பாடு, முட்டுப்பாடு எதனையும் விதிக்காத இலங்கையின் அரசமைப்பானது, அதே அரசமைப்பின் கீழ் வரையறுக்கப்பட்ட அடிப்படை உரிமைகளைப் பல்வேறு காரண, காரியங்கள், சந்தர்ப்பங்களின் கீழ் கட்டுப்படுத்தி, மட்டுப்படுத்தி, வரையறை செய்ய வழி வகுக்கின்றது.

வகை, தொகையின்றியும் காரணமின்றியும் ஈழத் தமிழர்களைக் கைது செய்யவும், சித்திரவதைக் கூடங்களில் காலவரையின்றி அவர்களைத் தடுத்து வைக்கவும் வழி செய்யும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அவசரகாலச் சட்ட விதிகள் போன்றவற்றிற்கெல்லாம் இடமளித்து வளைந்து கொடுக்கிறது இந்த அரசமைப்பு. ஆனால், சிங்கள மொழி, பௌத்த மதம் என்ற இரண்டையும் மேலாதிக்கம் செலுத்த வைக்கும் ஏற்பாடுகளை நசிந்து கொடுக்க இடமளிக்காமல் உறுதியாகத் தூக்கிப் பிடிக்கிறது

தமிழரின் பங்களிப்போ, இசைவோ, இணக்கமோ இன்றி தமிழர் மீது திணிக்கப்பட்ட - ஒற்றையாட்சி முறையை வலியுறுத்துகின்ற - இந்த அரசமைப்பிலிருந்து தம்மை விடுவித்து தமக்கும் சம உரிமை தரும் ஏற்பாட்டை உருவாக்குவதுதான் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தின் மைய ஆன்மாவாக இருக்கிறது.

அந்தவகையில் மனித உரிமைகள் தினத்தில் இந்தப் போராட்டமும் கௌரவத்திற்கு உரியதாகின்றது.

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே நோக்கம்
# புலிகளுக்கு ஆதரவாக நோர்வே செயற்படவில்லை

## அந்நாட்டுப் பிரதமர் தெரிவிப்பு



சென்னை,டிசெ.10

நோர்வே அரசு ஒருபோதும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படவில்லை. நீண்டுநிலைத்திருக்கும் இலங்கை இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதே நோர்வேயின் நோக்கமாகும்.

இந்தியாவிற்கு விஜயஞ்செய்த நோர்வேப் பிரதமர் ஜேன்ஸ் ஸ்டோல்ட்டன்பேர்க் இவ்வாறு உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு நேற்றுமுன்தினம் இந்தியா சென்றுள்ள நோர்வேப் பிரதமர் ஸ்ஜேன்ஸ் ஸ்டோல்ட்டன் பேர்க் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், ஜனாதிபதி அப்துல் கலாம் மற்றும் காங்கிரஸ் தலைவி திருமதி சோனியா காந்தி ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுகள் நடத்தினார்.

புதுடில்லியில் பிரதமர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

இலங்கை அரசும் - விடுதலைப் புலிகளும் சமாதான முயற்சிகளில் உண்மையான அக்கறை காட்டினால் நோர்வே அரசு இரு தரப்புகளுக்கும் இடையில் தொடர்ந்தும் சமாதான அனுசரணையாளராகச் செயற்படத் தயாராக இருக்கிறது. போர் நிறுத்த உடன்படிக்கையை இருதரப்பினர்களும் மதித்து நடக்கவேண்டும். இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியப் பிரதமருடன் பேச்சு நடத்தவுள்ளேன்.

அமைதிப் பேச்சுகளை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது என்பது குறித்து அரசு மற்றும் புலிகள் தரப்புகளுடன் கலந்தாலோசித்து முடிவுசெய்யப்படும். இருதரப்புகளும் ஆர்வம்காட்டினால் சமாதான நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல எமது அரசு தயாராகவே இருக்கிறது. இதேவேளை, அமைதிப் பேச்சுக்கள் எப்போது மீண்டும் ஆரம்பமாகும் என்று தற்போது கூறமுடியாது.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக நோர்வே அரசு செயற்படுவதாக எம்மீது குற்றஞ்சுமத்தப்படுகிறது. அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. நாங்கள் எதையும் சாதிக்கப் போவதில்லை. மாறாக சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் அமைதியை நிலைநாட்டமுடியும். நாம் எதையும் எவர் மீதும் திணிக்கமுடியாது. முடிவை எட்டுவதற்கு எம்மால் உதவ மட்டும் தான்முடியும்.

இலங்கையில் மீண்டும் வன்முறை வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இது மிகவும் கவலை தருவதாகவுள்ளது - என்றார் நோர்வேப் பிரதமர். (ஐ-6-7)

# தவணைப் பரீட்சையில் மாணவர்கள் தோற்றாத பாடங்களுக்கு மீள்பரீட்சை

## யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.10

யாழ். கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் மூன்றாம் தவணைப் பரீட்சையில் கடந்த புதனன்று நடைபெற்ற பரீட்சைகளுக்குத் தோற்றாத மாணவர்களுக்கு மீண்டும் அந்தப் பாடங்களுக்குத் தோற்றச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

வடமராட்சிப் பிரதேச மாணவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துப் பாடசாலை மாணவர்களின் பகிஷ்கரிப்பு மாவட்டம் முழுவதும் விஸ்தரிக்கப்பட்டது. எனினும், கடந்த புதன்கிழமை சில பாடசாலைகளில் திட்டமிட்டபடி தவணைப் பரீட்சைகள் ஆரம்பமாகியிருந்தன. மாணவர்களுக்குப் பரீட்சை வினாத்தாள்கள் வழங்கப்பட்டன. அதனால் அன்றையதினம் பரீட்சைக்குச் சில மாணவர்கள் தோற்றியிருந்தனர். பகிஷ்கரிப்புக் காரணமாகப் பாடசாலைக்குச் சமுகமளிக்காத பல மாணவர்கள் பரீட்சை எழுதமுடியாமல் போய்விட்டது.

அத்தகைய மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு பரீட்சை எழுதத்தவறிய மாணவர்களுக்குப் புதிதாக வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

மீள் பரீட்சையை எப்போது நடத்துவது என்று சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுடன் கலந்துரையாடி இன்னும் ஒருசில தினங்களில் முடிவுசெய்யப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-13)

# கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் புதிய கட்டடம் நாளை காலைதிறப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.10

வடமராட்சி தெற்கு - மேற்கு கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்குப் புதிதாக நிறுவப்பட்ட கட்டடத் திறப்பு விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குச் சம்பிரதாயபூர்வமாக நடைபெறவுள்ளது.

வடமராட்சி தெற்கு - மேற்கு கரவெட்டிப் பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில், பிரதம விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் க.கணேஸ், வடக்கு - கிழக்கு வீடமைப்பு, புனர்நிர்மாணத் திட்டத்தின் திட்டப் பணிப்பாளர் செ.பத்மநாதன், பிரதிப் பிரதம செயலாளரும் (நிதி) 'நீர்ப்' திட்ட இணைப் பாளருமான கே.மகாலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும், சிறப்பு விருந்தினராக கட்டடங்கள் திணைக்களப் பிரதம பொறியியலாளர் க.குகநேசனும் கலந்துகொள்வர்.

முன்னதாக விருந்தினர்கள் கரணவாய் மூத்தவிநாயகர் ஆலயத்தில் இருந்து மங்கள வாத்தியம் சகிதம் அழைத்து வரப்படுவர். தொடர்ந்து பிரதேச கீதம் இசைக்கப்படும்.

செயலகப் பெயர்ப்பலகையை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரை நீக்கம் செய்துவைப்பர். பின்னர், 'நீர்ப்' திட்டப் பெயர்ப்பலகையைத் திட்டத்தின் மாகாண இணைப்பாளர் கே.மகாலிங்கம் திரைநீக்கம் செய்வார்.

தொடர்ந்து பிரதேச செயலகக் கட்டடத்தை யாழ். அரச அதிபர் க.கணேஷ் திறந்துவைப்பார். அடுத்து பிரதேச செயலக உள்ளகத் தொலைபேசி இணைப்பைக் கட்டடங்கள் திணைக்களப் பிரதம பொறியியலாளர் க.குகநேசனும், பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தை முன்னாள் யாழ். அரச அதிபரும், வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டப் பணிப்பாளருமான செ.பத்மநாதன் திறந்துவைப்பர்.

தொடர்ந்து ஆசியுரைகள், தலைமையுரை, வாழ்த்துரை, காணிக்கொள்வனவு உறுப்பினர் உரை, கௌரவ, சிறப்பு, பிரதம விருந்தினர்களின் உரை என்பன இடம்பெறும். அடுத்து பிரதேச செயலகக் கட்டடத் திறப்புவிழாச் சிறப்பு மலர் யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியினால் வெளியிட்டு வைக்கப்படும். மலர் வெளியீட்டுரையை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் செ. சேதுராஜா நிகழ்த்துவார். (எ)

**நாளை**

கார்த்திகை 26
ஞாயிற்றுக்கிழமை
11.12.2005
திதி: ஏகாதசி
முன்னிரவு : 11.48 வரை
நட்சத்திரம் : ரேவதி
முற்பகல் : 10.23 வரை
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 09.19- 10.49
ராகுகாலம் : 04.49 - 06.19
(யாவும் பழைய நேரப்படி)

# தொண்டமானின் பாதுகாப்பு குறைக்கப்பட்டதற்கு ஆட்சேபம்

## ரணில், சம்பந்தன், ஹக்கீம் கூட்டாகக் கடிதம்

கொழும்பு,டிசெ.10

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் பாதுகாப்புக் குறைக்கப்பட்டதற்கு எதிராகப் பிரதான கட்சிகளின் தலைவர்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்திருக்கின்றார்கள்.

இதுதொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் ஆர். சம்பந்தன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் ஒப்பமிட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நேற்றுமுன்தினம் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருக்கின்றன. அதில் அவர்கள் தெரிவித்திருப்பதாவது:-

கடந்த சில நாள்களாக மோதல்கள் அதிகரித்துவரும் நிலையில் எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் - குறிப்பாக அரசியல் கட்சிகளின் தலைவர்களினதும் - பாதுகாப்பு உண்மையில் பலப்படுத்தப்படவேண்டும் என்பதை நாம் வலியுறுத்திக் குறிப்பிடத் தேவையில்லை.

ஆனால், அதற்கு மாறாக எதிர்த்திசையில் நடவடிக்கை எடுக்கப்படுவதை நாம் காண்கிறோம்.

'பாதுகாப்பு நிலைமை குறித்து முக்கிய கவனம் எடுத்துத் தொண்டமானுக்குரிய பாதுகாப்பைப் பழைய மட்டத்துக்கு உயர்த்துமாறு தீவிரமாக நாம் கோருகிறோம் ' என்று உள்ளது. (க)

**உதயவாக்கு**

அச்சம் இருக்கும் வரையில் நீ அறிவாளியாகமாட்டாய்.

- ஓர் அறிஞன்.

## ஞானாசாரியார் கல்லூரி - கரவெட்டி
### பழைய மாணவர் சங்கம்
### வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2005

மேற்படி பொதுக்கூட்டம் 31.12.2005 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தலைவர் வே.சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் ஞானாசாரியார் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும். அனைத்து அங்கத்தவர்களையும் சமுகம் தருமாறு வேண்டுகின்றோம்.

### நிகழ்ச்சி நிரல்

1. இறைவணக்கம்
2. தலைமை உரை
3. போஷகர் உரை
4. சென்ற பொதுக்கூட்டறிக்கை
5. செயற்பாட்டறிக்கை
6. பொருளாளர் கணக்கறிக்கை (1993 தொடக்கம் 2005 வரை)
7. பிரேரணைகள் (இருப்பின்)
8. யாப்பு அங்கீகரித்தல்
9. ஏனைய விடயங்கள்
10. புதிய உத்தியோகத்தர் தெரிவு
11. நன்றியுரை

குறிப்பு:
(1) பழைய மாணவர்கள் ரூபா 10/- ஐச் செலுத்தி அங்கத்துவ விண்ணப்பப்படிவத்தைக் கல்லூரியில் பெற்று பூரணப்படுத்தி மீள ஒப்படைப்பதன்மூலம் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.
(2) பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் 24.12.2005 சனிக்கிழமைக்கு முன் செயலாளரிடம் அல்லது கல்லூரியில் ஒப்படைக்கவும்.

**தா.வல்லிபுரம்,**
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.

2005.12.10
(சி/46714) (24-16-19)

## 31 ஆம் நாள் நினைவு தினம்



தோற்றம் 29-11-1996 — மறைவு 11-11-2005

அம்மன்! எங்கள் ஒளி விளக்கே!!
எங்கள் குடும்பம் ஒரு தேன் கூடு
அதில் நீ ஒரு இராணித் தேனீ
கொடிய காலன் கல் பட்டு
எங்கள் தேன் கூடு கலைந்ததம்மா
கலைந்த கூட்டிலிருந்து நீ பிரிந்து
காணாத தூரம் போய் விட்டாய்!
கண்கள் அருவியாக நெஞ்சங்கள் ரணமாக
கண்ணே உனைத் தேடித் தேடிக்
கரைந்து போனோம் நாமெல்லாம்.

அன்னாரின் 31ம் நாள் நினைவுதினமான 11.12.20005 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தேவராஜா கிருஷிகா**

**தகவல்: அப்பா, அம்மா, அப்பம்மா (இலங்கை),அம்மம்மா (இலங்கை),பெரியமாமா,மாமி(U.K),சித்தி,சித்தப்பா(ஜேர்மன்), சின்னமாமா (இலங்கை) பெரியப்பாமார் , மாமி.**

**'லிங்க வாசா' சேர்ச் லேன்,உடுப்பிட்டி.**

## கண்ணீர் அஞ்சலி



*இணுவில் கந்தசுவாமி கோயில் தர்மகர்த்தா சபை நிர்வாகக் குழுத்தலைவர் அமரர் சு.இராமலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் தற்போதைய தர்மகர்த்தா சபை உறுப்பினர் திரு.இ.அருணகிரிவாசன் அவர்களின் தாயுமான*

**திருமதி சின்னம்மா இராமலிங்கம்**

*04.12.2005 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானதையிட்டு எமது அஞ்சலியினைத் தெரிவிக்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

கந்தசுவாமி கோயில்,
இணுவில்.

**தர்மகர்த்தா சபை உறுப்பினர்கள்,
பூசகர்கள், ஊழியர்கள்.**

(43840)(32-16-19-24)

## வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைக்க அரசு, புலிகளை வற்புறுத்துகிறது ஆஸி.

நிரந்தரமான அமைதித் தீர்வொன்றை எட்டுவதற்காகப் போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செம்மையாகக் கடைப்பிடித்து வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு இலங்கை அரசும், விடுதலைப்புலிகளும் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென ஆஸ்திரேலியா வலியுறுத்தியிருக்கிறது.

இலங்கையின் போர்நிறுத்த ஒப்பந்த மீறல் குறித்து அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்ஸாண்டர் டௌனர் நேற்று அறிக்கையொன்றை விடுத்திருக்கிறார். அந்த அறிக்கையிலேயே இவ் வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் வடக்கு - கிழக்கில் இடம்பெற்றுவரும் வன்முறைகள் தொடர்பில் ஆஸ்திரேலியா கவலை கொண்டுள்ளதுடன் கடந்த 4ஆம், 6ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தாக்குதல்களையும் கண்டிக்கின்றது. அதேபோல் கிழக்குக் கரையோரப் பகுதிகளில் சிவிலியன்கள் கொல்லப்படுவதையும் ஆஸ்திரேலியா கண்டிக்கின்றது. அண்மைய தாக்குதல் சம்பவங்கள் போர்நிறுத்த ஒப்பந்தத்தைப் பாரதூரமாக மீறுவனவாக அமைந்திருக்கின்றன.

அமைதி முயற்சிகள் தொடர்பில் இலங்கை அரசு கொண்டுள்ள அக்கறையை ஆஸ்திரேலியா வெகுவாக வரவேற்கின்றது - இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)


**படிவம்**

இலங்கை வங்கிப் பயிற்சி ஆளணி உதவியாளர் பதவி, மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி தொழில் கற்கை நெறிகளுக்கு அநுமதி பெறுவதற்கு விண்ணப்பிப்பதற்கான படிவங்கள் உண்டு.

Bharathy Pathippakam, 430, K.K.S. Road, Jaffna.



## மலிவு விற்பனை மலிவு விற்பனை

**மாணவ மணிகளே!பாடசாலை அதிபர்களே!**



**புது ஆண்டையொட்டி 10% தொடக்கம் 50% வரை விசேட கழிவு வழங்கப்படுகின்றது.**

**எங்கள் ஸ்தாபனத்தில் சகல விதமான புத்தகங்கள், தர உள்ளீட்டுப் பொருள்கள், அலுவலக உபகரணங்கள், மாணவ பயன்பாட்டுப் பொருள்கள் உங்கள் தேவை எதுவாயினும் பெற்றுக்கொள்ளலாம்.**

*2006 ஆம் ஆண்டுக்கான எங்கள் மலிவு விற்பனை தை மாத இறுதி வரை நடைபெறும்.*

**எந்தப் பொருள்கள் ஆனாலும் தரமாகவும் உத்தரவாதத்துடன் பொருள்களை உங்கள் காலடியில் கிடைக்குமாறும் ஏற்பாடு செய்பவர்கள்.**

**46 வருடங்களாக இலங்கைத்தீவு எங்கிலும் கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கி இலட்சக்கணக்கான வித்தகர்களை உருவாக்கிய ஸ்தாபனம்.**

**எங்கள் ஸ்தாபனம் பணம் மட்டும் சேர்க்கும் நிறுவனம் அல்ல ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!**

**Dec-10ஆம் திகதி முதல் Jan- 30ஆம் திகதிவரை சனிக்கிழமை முழு நாளும் ஞாயிறு 3 மணி வரைக்கும் உங்களுக்காகத் திறந்திருக்கும்.**

**M/S ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
இல: 212- 214, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். T.P.:021 222 5542 (C1/46712)


## திருமண அழைப்பு



**அன்புடையீர்!**

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் கார்த்திகை மாதம் 26ஆம் நாள் (11.12.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிமுதல் 10.20 நிமிடம்வரையுள்ள சித்தயோகமும் ரேவதி நட்சத்திரமும், கூடப்பெற்ற சுபமுகூர்த்த வேளையில்,

எமது கனிஷ்ட புத்திரன் **விமல்குமார்** அவர்களுக்கும்,



எமது கனிஷ்ட புத்திரி **சந்திராதேவி** அவர்களுக்கும்,

இறைவன் திருவருள் துணைகொண்டு சட்டநாதர் வீதி, நல்லூர் இளங்கலைஞர் திருமண மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை அசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்,

திரு.த.குமாரசாமி,
(த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்)
(த.குமாரசாமி & சன்ஸ்)
352,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

திரு.திருமதி.செல்வரத்தினம்,
இடைப்பிட்டி,
காரைநகர்.

[இருவீட்டார் அழைப்பு]




# CHRISTMAS OFFER FROM MOBITEL

**Total Incoming Free PKG**

| | Peak | Off Peak |
|---|---|---|
| Out going | 9.50 | 5.00 |
| In coming | Free | Free |
| M to M(out going) | 5.00 | 4.00 |

இச்சலுகை 19th Dec மட்டுமே---

**Pre paid Card**

| | Peak | Off Peak |
|---|---|---|
| Out going | 10.00 | 6.00 |
| In coming | 6.00 (1st 2min free) | Free |

**Without Commitment**

**Nominated any Four numbers out going 5/=**



**All Phones Sales With 1 Year Warranty**

**412, Hospital Road, Jaffna. T.P:021 222 2031**

# வெள்ளத்தினால் வீடுகளை இழந்த 32 குடும்பங்களுக்குக் கொட்டகைகள்

## யுனிசெவ் நிறுவனம் அமைத்துக் கொடுத்தது

கிளிநொச்சி,டிசெ.10

அண்மையில் ஏற்பட்ட பருவமழை வெள்ளம் காரணமாக கிளிநொச்சி, அக்கராயன் குளப் பிரதேசத்தில் வீடுகளை முற்றாக இழந்த 32 குடும்பங்களுக்கு யுனிசெவ் நிறுவன நிதியுதவியுடன் தற்காலிக கொட்டகைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் கரைச்சிப் பிரதேச செயலகம், அக்கராயன் அபிவிருத்தி நிறுவனம் ஆகியன இணைந்து அமைத்த இந்தக் கொட்டகைகள் கடந்த 6ஆம் திகதி பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத் தலைவர் ச.கிருஷ்ணபிள்ளை தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் மங்கள விளக்கை ஸ்கந்தபுரம் கிராம அலுவலர் க.மகேந்திரன், கிளிநொச்சி மாவட்ட போரூட் நிறுவன திட்ட உதவியாளர் மாரி அம்மையார், அக்கராயன் தென்னிந்தியத் திருச்சபையைச் சேர்ந்த சௌந்தரநாயகம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. (த-203)

## கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

# முல்லைத்தீவில் பேரலையால் பலியானோரின் நினைவுத்தூபி

முல்லைத்தீவு,டிசெ.10

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலையின் போது இறந்த அனைத்து மக்களின் நினைவாக நினைவுத்தூபி ஒன்று நிறுவப்படவுள்ளது.

ஆழிப்பேரலையினால் முற்றாக அழிவுற்ற முல்லைத்தீவு பேதுருவானவர் ஆலயத்தின் ஒரு பகுதியிலேயே இந்த நினைவுத்தூபி அமைக்கப்படவுள்ளது.

இதில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பேரலையினால் இறந்த மக்கள் சகலரினதும் பெயர்கள் பொறிக்கப்படவுள்ளன என்றும் இதற்கான வேலைகள் முல்லைத்தீவு ஆலய பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் தலைமையில் இடம்பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-3-190)

## மன்னார் - சங்குப்பிட்டி வீதியைப் புனரமைக்குமாறு கோரிக்கை

முழங்காவில்,டிசெ.10

பூநகரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள மன்னார் - சங்குப்பிட்டி வீதி கடந்த 30 வருடங்களாகப் புனரமைக்கப்படாமல் இருக்கின்றது.

இந்த வீதியில் செம்பன்குன்று 7ஆம் கட்டை, மண்டைக்கல்லாறு, நாச்சிக்குடா, வெள்ளாங்குளம் ஆகிய பகுதிகளில் பாரிய குழிகள் காணப்படுகின்றன. இந்த வீதியை உடனடியாகப் புனரமைப்பதற்கு உரிய தரப்பினர் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (த-323)

## வீரமுரசு நிகழ்வு

பரந்தன்,டிசெ.10

புதுக்குடியிருப்பு, கைவேலி அ.த.க.பாடசாலையில் வீரமுரசு நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி மல்லாவி வளநகர் பாடசாலையில் வீரமுரசு நிகழ்வு நடத்தப்படவுள்ளது. (த-352)

# 67 வருடம் பழமையான பாடசாலையில் நிரந்தரக் கட்டடம் ஒன்றுகூட இல்லை

வெள்ளாங்குளம்,டிசெ.10

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குமுழமுனை அ.த.க. பாடசாலை 1938 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 67 வருடங்கள் பழமை வாய்ந்த இப்பாடசாலையில் தற்போது நிரந்தரக் கட்டடம் ஒன்று கூட இல்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது. இங்கு தற்போது 116 மாணவர்கள் கல்விகற்கின்றனர்.

மாணவர்களுக்கான அடிப்படை வசதிகளும் அங்கு போதியளவில் இல்லை என்றும் கூறப்பட்டது. அங்குள்ள வகுப்பறைத் தொகுதிக் கொட்டகைகளை கீழுள்ள படங்களில் காணலாம். (த-415)





# கூட்டுறவு ஊழியருக்குச் சம்பள உயர்வு வழங்க நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கோரித் தீர்மானம்

## வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த மாநாட்டில்

கூட்டுறவுப் பணியாளர்களுக்குக் கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அதிகரித்த சம்பள உயர்வை வழங்க வடக்கு - கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் நிதியுதவி வழங்க வேண்டும்.

- இவ்வாறு வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் பங்குபற்றிய மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசப்பாபதி தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் யாழ். மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட மட்ட கூட்டுறவுச் சங்கங்கள், 2ஆம் படிக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட சம்பள உயர்வான ரூபா இரண்டாயிரத்து 500 ஐ கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வழங்க சங்கங்களின் நிதி நிலைமை திடமற்றதாக உள்ளது. கூட்டுறவுத்துறைப் பணியாளர்கள் ஏற்கனவே மிகக்குறைவான ஊதியத்தையே பெறுகின்றனர்.

எனவே, இந்தச் சம்பள அதிகரிப்பைச் சங்கப் பணியாளர்களுக்குத் தொடர்ந்து வழங்க வடக்கு -கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொருத்தமான திட்டமொன்றினை வகுத்து அதனடிப்படையில் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அங்கு ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வு, கூட்டுறவுப் பணியாளர்களுக்கும் 01.04.2005 முதல் வழங்கப்படவேண்டுமென வடக்கு - கிழக்கு மாகாணக் கூட்டுறவு ஆணைக்குழுவின் செயலாளர் சொ.அமிர்தலிங்கம் அப்போது சுற்றறிக்கை ஒன்றின்மூலம் வடக்கு - கிழக்கிலுள்ள சகல கூ.சங்கங்களுக்கு அறிவித்திருந்தார்.

இந்தச் சுற்றறிக்கையின் பிரகாரம் சில கூட்டுறவுச் சங்கங்கள் நிதிநிலை காரணமாகச் சம்பள உயர்வை வழங்காமையைக் கவனத்தில்கொண்டு அதற்கான காரணத்தை அறியத்தருமாறு ஆணைக்குழுவின் செயலாளர் சங்க நிர்வாகங்களைக் கேட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-30)



கோப்பாய் சத்திய சேவா நிலையத்தில் நடைபெற்ற பகவான் ஸ்ரீசத்திய சாயி பாபாவின் 80 ஆவது அவதார தினநிகழ்வின்போது கோப்பாய் சாயி சிறுவர் இல்ல மாணவர்கள் பகவானின் மகிமை என்னும் தலைப்பில் வில்லிசை நிகழ்த்தியபோது எடுக்கப்பட்டபடம். (ஜ-72)

## கடும் மழை பாதித்தோருக்கு சமையல் உபகரணங்கள்

அண்மையில் பெய்த கடும் மழையினால் பாதிக்கப்பட்ட இருபாலை தெற்கு, இருபாலை கிழக்கு, புத்தூர் கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு சமையல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கோப்பாய் கிளை மேற்படி சமையல் உபகரணங்களையும், வீட்டுப் பாவனைப்பொருள்களையும் வழங்கவுள்ளது என்றும் -

நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்து இவை வழங்கப்படும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-75)

## தபுதாரர் ஓய்வூதியம் தொடர்பாக பிரதேச செயலகங்களில் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.10

அரச சேவையில் உள்ள பெண்கள் தங்கள் மறைவுக்குப் பின்னர் தமது கணவர்களுக்கு தபுதாரர் ஓய்வூதியம் கிடைப்பதற்கான ஒழுங்குகளைச் செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நல்லூர் ஓய்வூதியர் நலன்புரிச் சங்கம் தமது பகுதி ஓய்வூதியர்களுக்கு அறிவித்துள்ளது.

அரச சேவையில் கடமைபுரிந்து ஓய்வூதியம் பெற்றுள்ள பெண்கள் தங்களின் மறைவைத் தொடர்ந்து தங்கள் கணவன்மாருக்கோ அல்லது அவர்களால் நியமிக்கப்படுபவர்களுக்கோ தபுதாரர், அனாதைகள் ஓய்வூதியம் கிடைப்பதற்கான ஒழுங்குகளை ஏற்கனவே செய்யாதிருந்தால் அவர்கள் மீண்டும் அந்த ஒழுங்குகளைச் செய்ய இம்மாதம் 31.12.2005 வரை அரசாங்கத்தால் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் உடனடியாகத் தங்கள் தங்கள் பிரதேச செயலருடன் தொடர்புகொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி நல்லூர் ஓய்வூதியர் நலன்புரிச் சங்கம் தெரிவித்துள்ளது. (ஜ)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# சூழல்பாதுகாப்பு விதிமுறைகளுக்கமைய செயற்படாத தொழில் நிலையங்களை மூடுமாறு அதிகாரி உத்தரவு

தென்மராட்சி,டிசெ.10

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சூழல் பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைவாக செயற்படாத தொழில் நிலையங்களை மூடுமாறு சூழல் பாதுகாப்பு அதிகாரியால் உத்தரவு இடப்பட்டுள்ளது.

கடந்த வாரம் தொழில் நிலையங்களைப் பார்வையிட்ட சூழல் பாதுகாப்பு அதிகாரிகள் சூழல் பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைவாகச் செயற்படாத தொழில் நிலையங்களை உடனடியாக மூடுமாறு உத்தரவிட்டனர்.

சூழல் பாதுகாப்புடன் தொடர்புடைய தொழில் நிலையங்களை ஆரம்பிப்போர் சாவகச்சேரி நகரசபை, யாழ்ப்பாண மாவட்ட சூழல் பாதுகாப்பு அலுவலர் ஆகியோரின் அனுமதிபெற்ற பின்னரே அதற்குரிய கட்டடங்களை அமைக்க வேண்டுமெனவும், உரிய சான்றிதழ் பெறாமல் ஆரம்பிக்கப்படும் தொழில் நிலையங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி மூட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (203-117)

# வலி.தென்மேற்கு பிரதேச சபையிலிருந்து மூவருக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம்,டிசெ.10

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையில் இருந்து மூன்று அலுவலர்கள் அடுத்த ஆண்டில் இடமாற்றம் பெறுகின்றனர்.

இவர்களுக்கான இடமாற்றக் கடிதங்க ளைப் பிரதேச சபை செயலாளர் மே.சாந்த சீலன் வழங்கியுள்ளார்.

01-01-2006இல் இருந்து புதிய சேவை நிலையத்திற்கு இடமாற்றம் பெறும் அலு வலர்களின் பெயர், பதவி, புதிய நிலையம் வருமாறு:-

- செ.ரமேஷ் - உள்ளூராட்சி உதவி யாளர் - வேலணை பிரதேச சபை.
- செல்வி அ.நாகேஷ்வரி - முகாமைத்துவ உதவியாளர் - சுன்னாகம் பிரதேச சபை.
- நா.குமணன் - முகாமைத்துவ உதவி யாளர் - சுன்னாகம் பிரதேச சபை.

(எ-183)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

ரோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது!

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

ரோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!

Packed By:- ROYAL INDUSTRIES COLOMBO 12 ☎:0777-277670

அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்: சிவா நறுமணப்பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ☎: 021 222 2567

(C-43109)


# அஞ்சல் அதிபர்களுக்கான நியமனக் கடிதங்கள் கொழும்பில்

யாழ்ப்பாணம்,டிசெ.10

உப அஞ்சல் அதிபர்கள் மற்றும் சிற்றூழி யர் தரங்களில் இருந்து போட்டிப் பரீட்சை மூலம் அஞ்சல் அதிபர்களாகத் தெரிவுசெய் யப்பட்ட 17 உத்தியோகத்தர்களுக்கு எதிர் வரும் 14ஆம் திகதி கொழும்பில் நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன என்று பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் வீ.குமரகுரு தெரிவித்தார்.

நியமனம் பெற்றவர்களுக்கான 2 வார பயிற்சிநெறிகளை யாழ்ப்பாணத்தில் நடத்து வதற்கு அனுமதி கிடைத்துள்ளது என்றும் -

முன்பு நியமனக் கடிதங்கள் பெறுவ தற்காக அழைக்கப் பெற்றிருந்த உத்தி யோகத்தர்கள் அனைவரும் இந்த நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்வரும் 14ஆம் திகதி கொழும்பில் நேரில் தவறாது சமுகமளிக்க வேண்டும் என்றும் - பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் அறிவித் துள்ளார்.

(எ-12-14)

# விடுமுறையில் சென்ற டாக்டர்கள் திரும்பவில்லை நோயாளர் சிரமம்

யாழ்ப்பாணம்,டிசெ.10

மந்திகை மாவட்ட வைத்தியசாலையில் பணியாற்றிவந்த தென்னிலங்கையைச் சேர்ந்த டாக்டர்கள் இருவர் விடுமுறையில் சென்று நீண்டநாள்களாகியும் இதுவரை சேவைக்கு மீளத் திரும்பவில்லை. இதனால் நோயாளர்களுக்கான வைத்திய சேவை வழங்குவதில் சிரமம் எதிர்கொள்ளப்படு வதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போது வட பகுதியில் நிலவும் அசம்பாவிதங்களை அடுத்து இந்த டாக் டர்கள் மீண்டும் பணிக்குத் திரும்பு வார்களா என்று வைத்தியசாலை வட்டாரத்தில் சந்தே கம் எழுந்துள்ள தாக ஒரு தகவல் தெரிவித்தது.

(எ-15)

யாழ்ப்பாணம் செளக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்புக் கடன் நிவிர்த்திச் சங்கம் (வ-து)

## பொன் விழாவும் நாற்பத்தைந்தாவது வருடாந்தப் பொதுக்கூட்டமும்

**இடம்:** *யாழ்.அரசினர் போதனா வைத்தியசாலை, மருத்துவ சிகிச்சைப் பகுதி*
**காலம்:** *நாளை (11.12.2005) ஞாயிற்றுக்கிழமை*
**நேரம்:** *முற்பகல் 10 மணி*
**தலைவர்:** *திரு.செ.பேரின்பநாதன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.*

*சகல அங்கத்தவர்களையும் தவறாது சமூகம்தரும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.*

**சி.பாக்கியலிங்கம்**
**செயலாளர்.**

(43756)(32-16-19)

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## சின்னத்தம்பி இராசலிங்கம்
(நூர்சி)

தோற்றம் 15-06-1949 மறைவு 10-12-1999

என் நெஞ்சமெல்லாம் நிறைந்த தந்தையே!
ஏன் இந்த அவசரம் உங்களுக்கு
ஆயிரம் கைகள் அள்ளி அணைத்தாலும்
அன்னை தந்தை போல் வருமோ
இவ்வுலகில்
எங்கள் வாழ்க்கையின் முன்னுரை நீங்கள்
காலன் உங்கள் கணக்கை முடித்து எழுதி
விட்டான் முன்னுரையை
நாங்கள் கரையை ஒதுங்கிய ஓடம்போல்
துவண்டு நிற்கிறோம்.

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

பாடசாலை வீதி,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

தகவல்:
**துரைரெட்ணம்.**

(43669)(32-16-19)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## சுப்பிரமணியம் பூரணம்



கடந்த 10.11.2005 வியாழக்கிழமை அன்று இறைபதமெய்திய எமது குடும்பக் குலவிளக்கு *திருமதி சுப்பிரமணியம் பூரணம்* அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள், மதியபோசன நிகழ்வுகள் இன்று (10.12.2005) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தமது குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புகையிரத வீதி, கோக்குவில் கிழக்கு.

*தகவல்:*
**தி.பாலகுமார்.**

(43817)(42-32-19-16)

# நீங்காத நினைவலையில் ஓராண்டு





ஜனனம் 21-11-1929 மரணம் 07-12-2004

ஜனனம் 21-08-1934 மரணம் 16-10-2004

அமரர் கந்தையா கதிர்காமத்தம்பி (MLT)

திருமதி பூமணி கதிர்காமத்தம்பி

ஆசையாய் அன்பு மழை பொழிந்திட்ட
என் ஆருயிர்த் தெய்வங்களே!
காலங்கள் கனவாய்க் கலைந்தனவோ
மாதங்கள் ஈராறு மறைந்தனவோ
என்னிதயத்தை உம்மிடம் தந்தேன்

என்னிதயத்தில் பதிந்த முத்துக்களே!
மகளாக என்னிடம் ஓடி வந்தாயே என் தாயே!
என்னோடு சேர்ந்திடவே
இனிய கனிவாயே எந்தையே!

உங்கள் பிரிவால் துயருறும்:
பாமினி (மகள் ),
கிருபானந்தா (மருமகன்)
(B.Sc.Hons Agric, PGIA,University of Peradeniya)
ஸ்ரீவர்சினி (பேர்த்தி) மற்றும் சகோதரர்கள்,
மைத்துனர்கள்.

231, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(43777)(32-16-19)

*வடமராட்சியில்*

# ENGLISH MEDIUM CLASSES - 2006

## 6,7, 8, 9 Classes

ஆரம்பம்: 14-12-2005 புதன்கிழமை

இடம்: I. ரவீன்ஸ் கரவெட்டி (காலை 8 மணி)
II. 146,தம்பசெட்டிவீதி, பருத்தித்துறை. (மாலை 3 மணி)

குறிப்பு: I. பழையமாணவர்கள் குறித்த நேரத்தில் சமுகமளித்து தமது வரவை உறுதிப்படுத்தவும்.
II. தரம் 6இற்கான அனுமதியில் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.
III. குறித்த இடங்களே இருப்பதால் அனுமதிக்கு முந்தவும்.

தொடர்புகளுக்கு: **ப.ஈஸ்வரநாதன்,**
ரவீன்ஸ்,
சிங்கத்தின் விடு,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

T.P.:021 2263321.

(43819)(42-32-19-46)

**United Nations Development Programme**
**Sustainable human development**

UNDP

**DRIVER – Batticaloa Duties and Responsibilities**

Under the general supervision of the functional supervisor; the incumbent performs the following functions:

- To drive UNDP staff/visiting as instructed;
  To ensure the required visibility and security materials are available in vehicles at all times.
- To operate and maintain UNDP radio equipment in the vehicle;
- To abide by all UN security regulations and UNDP policy and procedures and field restrictions on road travel by authorities;
- To ensure the service maintenance of the vehicles are carried out;
- To ensure the vehicles are kept clean and tidy;
- To maintain log book recording vehicle movements, mileage and fuel consumption;

**Educational Background**:
- Secondary Education, Valid driving license

**Experience**:
- Knowledge of driving rules and regulations and chauffer courtesies, skills in minor vehicle repair, initiative and discretion;
- Minimum 2 years work experience as a driver, safe driving record;
- Knowledge of the HF/VHF radio operations an asset;
- Good knowledge of location of roads within Sri Lanka;

**Languages**:
- Good working knowledge of English and Tamil
- Knowledge of Sinhala an asset

**Operational Skills:**
- Motivated, flexible and capable of working under pressure;
- Willingness to travel within Sri Lanka;
- Willingness to work out of normal office hours;

Please send us a detailed CV with names of two non-related referees and contact telephone numbers to reach us within 10 days of this asvertisement. Applications should be addressed to UNDP No. 30, Charles Velupillai Road, Kallady, Batticaloa. Please indicate position applied for on the top left hand corner of the envelope

# அரச ஆக்கிரமிப்பு இராணுவத்தை வெளியேற்ற உயர் பாதுகாப்பு வலய மக்கள் விடுதலைப் படை!

## இறுதிவரை ஆயுதப்போராட்டம் நடத்தப்போவதாகச் சூளுரை

கொழும்பு, டிசெ.10

வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து அரச ஆக்கிரமிப்பு இராணுவத்தை வெளியேற்றுவதற்காக இறுதிவரை போராடப் போகின்றது என அறிவித்திருக்கிறது 'உயர் பாதுகாப்பு வலய மக்கள் விடுதலைப் படை' என்ற அமைப்பு.

கீரிமலைவீதி, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு ஜோஸப் பிரின்ஸஸ் என்பவரின் பெயரில் இது தொடர்பாக அறிக்கை ஒன்று ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து அனைத்து இராணுவத்தினரும் வெளியேறும் வரை 'உயர் பாதுகாப்பு வலய மக்கள் விடுதலைப் படை' தனது ஆயுத வழிப் பரப்புரையைத் தொடரும். யாழ். மாவட்டத்திற்குள் இடம்பெயர்ந்த மக்களாகிய நாங்கள் எமது பொறுமையின் எல்லையை அடைந்துள்ளோம். அதனால், எங்களது இல்லங்களை சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்தினரிடமிருந்து விடுவிப்பதற்கு ஆயுதப் போராட்டத்தை நடத்த நாங்கள் தீர்மானித்திருக்கிறோம்.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் யாழ்.மாவட்டத்தின் 32 வீதப் பகுதியை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்துள்ளது. தேவையற்ற இந்த வலயத்திற்கு இடமளிப்பதற்காக எங்களில் மூன்று லட்சத்துக்கும் அதிகமானோர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறோம்.

1989 இல் வலிகாமம் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்ததைத் தொடர்ந்து நாங்கள் வீதியோரங்களிலும், பாடசாலைகளிலும், தேவாலயங்களிலும், கால்நடைத் தொழுவங்களிலும் தங்கி வாழ்ந்து அடிப்படை மனித உரிமைகளை இழந்து, கற்பனை பண்ணிக்கூடப் பார்க்கமுடியாத அவலங்களை அனுபவித்து வருகின்றமை எல்லோருக்கும் தெரிந்ததே.

கடந்த 16 வருடங்களாகத் தொடர்ந்து வந்த அரசுகளோ அல்லது சர்வதேச சமூகமோ அல்லது நூற்றுக்கணக்கான சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களோ எங்கள் நிலைமை குறித்து கொஞ்சம்கூடச் சிரத்தை காட்டவில்லை. அதற்கு மாறாக, சர்வதேச சமூகம், இராஜதந்திரிகள், சர்வதேச ஊடகம் ஆகிய தரப்புகள் தமது நலனுக்குப் பொருத்தமான வகையில் இவ்விடயத்தில் அரசியல் நடத்துகின்றன.

கடந்த 16 வருடங்களாக இங்கு இடம் பெற்ற அரசியல் செயற்பாடுகளை நோக்கியதில், எங்கள் இல்லங்களிலிருந்து சிங்களப் படைகள் சமாதானச் சூழ்நிலையில் எந்த வகையிலும் வெளியேறமாட்டா என்ற முடிவுக்கு நாங்கள் வந்துள்ளோம்.

ஆகவே, எங்களின் இழந்த இல்லங்கள், வர்த்தக நிலையங்கள் மற்றும் பொது இடங்களை மீளப்பெறுவதற்கு ஒரே வழி, ஆக்கிரமிப்புச் சக்திகளை பலவந்தமாக வெளியேற்றுவதுதான் என்ற இறுதித் தீர்மானத்துக்கு நாம் வந்துள்ளோம்.

பாதிக்கப்பட்ட மக்களாகிய நாங்கள் எங்கள் இல்லங்களுக்குத் திரும்புவதற்கான எமது இலக்கை அடைவதற்கு ஒன்றிணைந்து உயர் பாதுகாப்பு வலய மக்கள் விடுதலைப் படையை அமைத்து, ஆக்கிரமிப்புப்படைக்கு எதிராகப் போர்ப்பிரகடனம் செய்வது என்ற முடிவுக்கு வந்துள்ளோம்.

எங்களது தாயக மண்ணுக்காக எமது உயிரைத் தியாகம் செய்யத் தயாராக உள்ள நாங்கள், எங்கள் மண்ணை ஆக்கிரமித்திருக்கும் சிப்பாய்களை அவர்களது வீடுகளுக்குச் சென்று அவர்களது குடும்பத்தவர்களுடன் மகிழ்ச்சியாக வாழும் அதேநேரம், அதே மகிழ்ச்சியான வாழ்வை நாங்களும் மேற்கொள்ள அனுமதிக்கும்படி அவர்களைக் கோருகிறோம்.

ஆக்கிரமிப்புப்படைகள் எமது இந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்தால், எங்கள் இல்லங்களை விடுவிப்பதற்கான ஆயுதப் போராட்டத்தைத் தொடர்வதைத் தவிர எமக்கு வேறு மார்க்கம் இல்லை.

ஆயுதப் போராட்டத்தில் எமது திடசங்கற்பத்தை மீள உறுதிப்படுத்தும் அதேசமயம், எங்கள் படைகள் அண்மைய நாள்களில் வெற்றிகரமாக மேற்கொண்ட பல நடவடிக்கைகளில், ஆகக்குறைந்தது பதினைந்து இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம் - என்றுள்ளது.(எ-7)

# யுத்த நிறுத்தக் கண்காணிப்புப் பணியை கைவிடுவதற்கு நோர்வேயும் விருப்பம்!

## நோர்ட்டிக் நாடு ஒன்றிடம் ஒப்படைக்க வாய்ப்பு

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்கான தலைமைப் பொறுப்பிலிருந்து நோர்வேயை விடுவித்து அந்தப் பொறுப்பை வேறு ஒரு நாட்டிடம் ஒப்படைக்கும் இலங்கை அரசின் உத்தேசத் திட்டத்தை நோர்வேத் தரப்பு ஆட்சேபிக்காதென்று இராஜதந்திர வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அமைதி முயற்சிகளுக்கான அனுசரணைப் பணியையும் நோர்வே மேற்கொள்வதால் கண்காணிப்புப் பணியை வேறொருநாட்டிடம் வழங்குவது தொடர்பில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை நடத்தி வருகிறார்.

இதன்படி போர் நிறுத்தக் கண்காணிப்புக்கான தலைமைப் பணியை ஸ்கண்டிநேவிய அல்லது நோர்ட்டிக் நாடுகளில் ஒன்றுக்கு வழங்குவதற்கு அவர் தீர்மானமொன்றை எடுக்கக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறான தீர்மானமொன்றை விடுதலைப்புலிகளும் ஆட்சேபிக்க மாட்டார்களெனத் தெரிவிக்கப்படும் அதேசமயம் நோர்வே அரசும் இதனை மறுத்துரைக்காதென நம்பப்படுகிறது.முன்னதாக அனுசரணைப் பணிகளை மேற்கொண்டு போர்நிறுத்தக் கண்காணிப்பையும் மேற்கொள்வது கடினமென்று யுத்தநிறுத்த ஒப்பந்தம் செய்யப்படும் போதே நோர்வே தெரிவித்திருந்தது. ஆனால் அப்போதைய சந்திரிகா அரசும் புலிகள் அமைப்பும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டதால் கண்காணிப்புப் பொறுப்பையும் நோர்வே ஏற்றுக்கொண்டது.

எவ்வாறாயினும் தற்போதுள்ள சூழ்நிலைகளின்படி அமைதி முயற்சிகளை ஆரம்பித்த பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நோர்வே மற்றும் விடுதலைப்புலிகளின் ஆட்சேபனையின்றி, போர்நிறுத்தக் கண்காணிப்புப் பணியை வேறொரு தரப்பினரிடம் ஒப்படைக்கும் வாய்ப்பிருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (எ-க)

## யுத்த எண்ணங்களைத் தூண்டிவிடுகின்றன புலிகளின் ஊடகங்கள்

# புதிய பாணியில் புலிகள் முன்னெடுக்கும் இராணுவ நடவடிக்கையால் மக்கள் அச்சம்

## தடுத்து நிறுத்த சர்வதேச சமூகத்தை அழைக்கின்றார் டக்ளஸ்



கொழும்பு,டிசெ.10

புதிய பாணியில் புலிகள் முன்னெடுக்கும் இராணுவ நடவடிக்கைகளால் சமாதானத்தை விரும்பும் மக்கள் மிகவும் அச்சத்திற்கு உள்ளாகியிருக்கின்றனர்.

இதேவேளை, யுத்த எண்ணங்களைத் தூண்டிவிடும் வகையிலான பிரசாரங்களை புலிகளின் ஊடகங்கள் வெளியிட்டு வருகின்றன.

- இப்படித் தெரிவிக்கின்றார் அமைச்சரும், ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா.

'சர்வதேச சமூகத்திடம் ஈ.பி.டி.பி. விடுக்கும் அவசர வேண்டுகோள்...!' என்ற பெயரில் அவர் எழுதியிருக்கும் கடிதத்திலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

சகல வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் அனுப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த மாதம் 17 ஆம் திகதி நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட புதிய ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ கடந்த மாதம் 19 ஆம் திகதி பதவியேற்றுக்கொண்டுள்ளார்.

பதவிக்கு வந்ததும் ஈ.பி.டி.பி. உட்பட நாட்டின் சமாதானத்தை விரும்பும் மக்களும் சக அமைப்புகளும் எதிர்பார்த்திருந்தது போல் தனது நல்லெண்ண சமிக்ஞையை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

இனப்பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட சகல தரப்போடும் தான் பேசப்போகிறார் எனவும் குறிப்பாக புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் நேரடியாகப் பேசப்போகிறார் எனவும் ஜனாதிபதி அறிவித்திருக்கின்றார்.

நடைமுறை சாத்தியமான அணுகுமுறையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்போகிறார் என ஆர்வத்துடன் தெரிவிக்கின்றார்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பானது யுத்த முனைப்புகளுக்கும் வன்முறைகளுக்கும் இலங்கையில் இடமிருக்காது என்ற நம்பிக்கைகளை சமாதானத்தை விரும்பும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதியின் சமாதானத்திற்கான நல்லெண்ண சமிக்ஞைக்கு புலிகள் தரப்பில் இருந்து கிடைக்கப்போகின்ற பதிலை மக்கள் எதிர்பார்த்து காத்திருந்தனர்.

2005 நவம்பர் 27 இல் புலிகளின் தலைவர் பிரபாகரன் வழமைபோல் தனது வருடாந்த உரையை நிகழ்த்தியிருந்தார்.

முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களைத் தெரிவித்திருந்த பிரபாகரனின் வருடாந்த உரை சமாதானம் குறித்த நம்பிக்கைகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கவில்லை.

வழமைபோல் யுத்த முனைப்புகள் குறித்த கருத்துக்களையும் சமாதானம் குறித்த நம்பிக்கையீனங்களையும் தனது உரையில் தெரிவித்திருந்த புலிகளின் தலைவர் பிரபாகரன், கடந்த காலங்களில் தாம் பேச்சுவார்த்தைக்கு ஏன் சென்றிருந்தார் என்பதற்கும் விளக்கம் கொடுத்திருந்தார்.

சிங்கள அரசியல் தலைமைகளிடமிருந்து நீதி கிடைக்கப்போவதில்லை என்பதைத் தான் தெளிவாகப் புரிந்து தமது உரிமைகளை தாமாகவே போராடி வென்றெடுக்க வேண்டும் என உறுதி பூண்டிருந்தபோதும் தவிர்க்கமுடியாத வரலாற்றுச் சூழ்நிலைகள் காரணமாகச் சிங்கள அரசுடன் சமாதானப் பேச்சுகளில் பங்குபற்ற தாம் நிர்ப்பந்திக்கப்பட்டார் எனத் தனது உரையில் தெரிவித்திருந்த பிரபாகரன், தனது இலக்கை எட்டுவதற்கான யுத்த எண்ணங்களுக்கு சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காகவே தாம் பேச்சுவார்த்தைக்கு சென்றிருந்தார் எனவும் தெரிவித்திருந்தார்.

புலிகளின் தலைவர் பிரபாகரன் சமாதானம் குறித்த நம்பிக்கையீனங்களை மட்டுமே தெரிவித்திருந்த தனது இவ்வருட உரையிலும் இறுதியில் ஜனாதிபதி மஹிந்த அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பதை வழங்கிப் பார்ப்போம் என்று கூறியிருப்பது சர்வதேச சமூகத்திடம் அங்கீகாரம் பெறும் முயற்சிக்காக மட்டும்தான் என்பது தெளிவாகின்றது.

சர்வதேச சமூகத்திற்காக ஒரு புறத்தில் ஜனாதிபதிக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கிப் பார்ப்போம் என தெரிவித்துக்கொண்டு மறுபுறத்தில் இராணுவ அணுகுமுறையை இப்புரிந்துணர்வு ஒப்பந்த காலப்பகுதியில் வழமையைவிடவும் அதிகமாகக் கடைப்பிடிக்க புலிகள் ஆரம்பித்து விட்டனர்.

வடக்கில் யாழ்ப்பாணத்திலும் மற்றும் திருமலை, மட்டக்களப்பு போன்ற இடங்களில் படையினரைத் தூண்டிவிடும் வகையில் புலிகளால் பரந்த அளவிலான இராணுவ முன்னெடுப்பும் தாக்குதல்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதுவரை கால புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் முதன் முதலாக படையினர் மீது யாழ். கோண்டாவில் பகுதியில் வைத்து கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டு ஆறு படையினர் கொல்லப்பட்டு இருவர் படுகாயம் அடைந்தனர் . பின்னர் காயமடைந்த ஒருவர் கடந்த 5ஆம் திகதி காலமானார்.

அதேபோல் முதன் முதலாக யாழ். நீர்வேலி பகுதியில் புரிந்துண்ர்வு ஒப்பந்த காலத்தில் இதுவரை நடத்திருக்காத பரந்த அளவில் நேரடி தாக்குதலிலும் புலிகள் ஈடுபட்டு இரு படையினர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் டிசம்பர் மாதம் 6ஆம் திகதி புலிகளால் இருபாலையில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் 5 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அதேவேளை, கிழக்கில் காத்தான்குடி பிரதேச செயலாளர் ஏ.எல். எம்.பளீல் அவர்களை படுகொலை செய்ததன் மூலம் தமிழ் - முஸ்லிம் இனங்களுக்கிடையிலான மோதலையும் முரண்பாடுகளையும் புலிகள் தூண்டிவிட்டிருக்கிறார்கள்.

அதேபோல் கடந்த மாதம் 18ஆம் திகதி அதிகாலை அக்கரைப்பற்று முஸ்லிம் பள்ளிவாசலினுள் புலிகள் கைக்குண்டு தாக்குதலை மேற்கொண்டு 6 முஸ்லிம்கள் கொல்லப்பட்டதுடன், 13 பேர் படுகாயம் அடைந்தனர். அதே மாதம் 19ஆம் திகதி ஏறாவூர் பகுதியில் வைத்து 4 முஸ்லிம்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். மேலும் டிசம்பர் 6ஆம் திகதி புலிகள் கிழக்கு மாகாணத்தில் உள்ள மருதமுனை பகுதி வாசிகளான இரு முஸ்லிம்களை சுட்டுக்கொலை செய்துள்ளனர்.

மாணவர்களின் பெயரால் மாணவர்களின் சீருடைகளை அணிந்த புலிகளின் சிறுவர் படையணியினர் படையினரின் சோதனைச்சாவடிகளுக்கு கல் எறிந்து தாக்குவதால் மாணவர்களின் கல்வி மற்றும் இயல்பு வாழ்க்கை என்பனவும் பல் மடங்கு பாதிக்கப்படும் அபாயம் தோன்றியுள்ளது.

புலிகள் புதிய பாணியில் முன்னெடுக்கும் இராணுவ நடவடிக்கைகளால் சமாதானத்தை விரும்பும் மக்கள் மிகவும் அச்சத்திற்கு உள்ளாகியிருக்கின்றனர்.

இதேவேளை, யுத்த எண்ணங்களை தூண்டிவிடும் வகையிலான பிரசாரங்களை புலிகளின் ஊடகங்கள் வெளியிட்டு வருகின்றன.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிடம் இறுதி யுத்தத்திற்கான நிதி சேகரிப்பு என்று பாரிய அளவில் உளவியல் அச்சுறுத்தலை விடுத்து பலாத்காரமாக நிதி சேகரிக்கும் காரியத்திலும் புலிகள் தீவிரமாக இறங்கியுள்ளனர். அதேவேளை, கோண்டாவில் பகுதியில் புலிகள் நடத்திய கிளைமோர் தாக்குதல் சம்பவத்தை வீடியோ படம் பிடித்து வெளிநாடுகளில் காட்டியும் நிதி திரட்டியும் வருகின்றனர்.

ஆகவே, இது குறித்து சர்வதேச சமூகம் உரிய நடவடிக்கைகளை எடுத்து விரைந்து பணியாற்ற வேண்டும்.

யுத்தத்தை தொடராதிருக்கவும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கவும் ஆவன செய்து அதற்கான அழுத்தங்களை கொடுப்பதற்கு சர்வதேச சமூகம் முன்வரவேண்டும்.

தமிழ் பேசும் மக்களின் சமாதானம் குறித்த நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புகளையும் சர்வதேச சமூகத்தின் கைகளில் நாம் ஒப்படைக்கின்றோம்.

சமாதானத்தை உருவாக்கவும் தமிழ் பேசும் மக்களை காப்பாற்றவும் விரைந்து செயலாற்ற முன்வரவேண்டும் என ஈ.பி.டி.பி கோரிக்கை விடுக்கின்றது. - என்று உள்ளது. (எ-க)

## மூக்குக்கண்ணாடி கண்டெடுப்பு

தென்மராட்சி,டிசெ.10

சாவகச்சேரி பொதுச் சந்தைப் பகுதியில் வியாபாரியொருவரால் கண்டெடுக்கப்பட்ட மூக்குக் கண்ணாடி ஒன்று சந்தை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவறவிட்டவர்கள் ஆதாரங் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (203-117)

## பரிசளிப்பு விழாவும் பெற்றோர் தின விழாவும்

யாழ்ப்பாணம்,டிசெ.10

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் பரிசளிப்பு விழாவும் பெற்றோர் தின விழாவும் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

இன்று சனிக்கிழமை காலை 8.45 மணிக்கு பரிசளிப்பு விழா நடைபெறும். இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ். இந்துக்கல்லூரி அதிபர் வீ.கணேசராசா கலந்துகொள்வார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.45 மணிக்கு பெற்றோர் தின விழா நடைபெறும். இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் லயன்ஸ்கழகத் தலைவர் பெ.இ.ரஞ்சன் கலந்து கொள்வார். (202)

## மரக்கன்றுகள் விநியோகம்

தென்மராட்சி,டிசெ.10

தென்மராட்சி தெற்கு, கோவிலாக்கண்டி பிரிவில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு சேவாலங்கா நிறுவனத்தினர் மாங்கன்றுகளை இலவசமாக வழங்கியுள்ளனர்.

கடந்த வாரம் ஒரு குடும்பத்திற்கு தலா இரண்டு மாங்கன்றுகள் வீதம் வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்பிரிவில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு இந்த நிறுவனத்தினரால் அண்மையில் தலா ஆறு தென்னம்பிள்ளைகள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.(203-117)

## பண்ணையாளர் சிரமம்

உள்ளூரில் உற்பத்தியாகும் கோழி முட்டைகளைச் சந்தைப்படுத்த முடியாமல் இருப்பதாகக் கோழி வளர்ப்போர் கூறுகின்றனர்.

வியாபாரிகள் கொழும்பிலிருந்து குறைந்த விலையில் பெருந்தொகையான முட்டைகளைக் கொள்வனவு செய்வதே இதற்குக் காரணம் என்றும் - அவர்கள் கூறுகின்றனர்.(எ-111)

## காயமுற்ற சிப்பாய் பலி

இருபாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த சிப்பாய் கடந்த புதன் உயிரிழந்துள்ளார்.

இதனால், இக் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்ட சிப்பாய்களின் எண்ணிக்கை 8 ஆக அதிகரித்துள்ளது. (எ-க)


**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
No 15, Sirambiyadi Lane,Jaffna.
Tel:- 021-2228250, 0777-222422

யாழ்நகரில் முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

**Computer Hardware Engineering Course**

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப்பெற......!

***Course Condense :-***

- கணனி தொடர்பான அறிமுகம்
- Operating System - Windows XP & Dos
- Internet & E-mail
- கம்ப்யூட்டரின் பாகங்களும் அவற்றின் விளக்கங்களும்.
- Mother board, Processor, Ram தொடர்பான விரிவான விளக்கம்
- கம்ப்யூட்டரை அசெம்பிள் செய்தல்
- அசெம்பிளிங் முடிந்தவுடன் என்ன செய்வது என்பது, தொடர்பான விளக்கம்.(BIOS Setup)
- Hard Disk ஐ முறைப்படுத்தல்
- Software,Operating System இன்ஸ்ரோல் செய்தல்
- கம்ப்யூட்டரில் ஏற்படுகின்ற பழுதுகளை சரிபார்த்தல்.

நன்மைகள்

- பாடநெறியின் இறுதியில் Computer Hardware சம்பந்தமான பூரண அறிவைப்பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- Pentium I முதல் Pentium IV வரையிலான Computer களில் பூரண செய்முறைப் பயிற்சி.
- எமது ஆய்வுகூடத்தில் கம்ப்யூட்டரின் உட்தொழிநுட்பம் பற்றி பூரண அறிமுகம் செய்வதால் கம்ப்யூட்டர் பற்றிய முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களினால் கற்பிக்கப்படுகின்றது.

***Hardware* பயிற்சி**

- கணனிப் பாகங்களை இனம் காணும் முறை
- Assembling
- BIOS Configurations (முறைப்படுத்தல்)
- Hard Disk இனை முறைப்படுத்தல் (Partition & Formatting)
- Net work தொடர்பான அறிமுகம்.
- Trouble Shooting / Maintenance

Free Study Pack & Driver CD

***Soft Ware* பயிற்சி**

- Operating System நிறுவும் முறை (Windows 98/ Windows XP)
- Software Install செய்யும் முறை.
- Driver Installation செய்யும் முறை (Sound card, Modem , VGA, TV Card, Printer)
- Trouble Shooting .(Files Updating, Copying)

வகுப்புக்கள் ஆரம்பம்:-
12/12/2005 :- 08.30-04.30

அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் அனுமதிக்கு முந்துங்கள்

*Course Fee :- 2000/=*
சர்வதேச தரம்வாய்ந்த சான்றிதழ்கள் வழங்கப்படும்

கொழும்பிலிருந்து வருகைதரும் பிரபல விரிவுரையாளரால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.



**ஏகாதசித் தீர்த்தம்**

**ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்**
**நாகேஸ்வரம் - அளவெட்டி**

நாளை (11.12.2005) ஞாயிறு காலை 8 மணிக்கு ஆரம்பமாகி 10 மணியளவில் வசந்தமண்டபப் பூசையும், தொடர்ந்து தீர்த்தமும் இடம்பெறும் என்பதை அன்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்

பொ.ப.சபை.
நாகேஸ்வரம் - அளவெட்டி. (43773)(21.15.19)



நிகரற்ற கல்விச்சேவையில் கடந்த பலவருடங்களாக முன்னணியில் திகழும் எமது நிறுவனத்தில்

**புதிய கல்வியாண்டு - 2006**

**ஆரம்பம்: 11-12-2005 ஞாயிறு காலை 8.30 மணி**
அனுமதிகள் வழங்கப்படுகின்றன. பல புதிய மாணவர்கள் முற்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுவருவதால் குறித்த எண்ணிக்கையுடன் அனுமதிகள் மட்டுப்படுத்தப்படும். - அதிபர்.

**மது கல்வி நிறுவனம்**
டச்சுவீதி, இருபாலை, கோப்பாய்.



**UDUVIL GIRLS' COLLEGE**

*Primary Department*
*Presents*

Kids - on - Stage

Annual Christmas Entertainment

on

Saturday, December 10, 2005, 9.30 A.M.

At

The College Hall

(C/46673)



**Danish Refugee Council (DRC)**

**Tender Notice**

**Tenders are hereby invited for the supply of the under mentioned items to sites in the districts set out below.**

| Item | Unit | Quantity/District Trincomalee | Kilinochchi | Mullaitivu |
|---|---|---|---|---|
| Ordinary Portland Cement | Bags | 5100 | 13600 | 6800 |
| Ribbed Tor Steel 10.0 mm | Bars | 3900 | 10400 | 5200 |
| Binding Wire | Kgs | 450 | 1200 | 600 |
| Ginisapu Door (2' x 5'6") | Nos | 300 | 800 | 400 |
| Brass Hinges (8") | Nos | 600 | 1600 | 800 |
| PVC Pipe – T250 (3 ½") | Feet | 1800 | 4800 | 2400 |
| Ceramic Squatting Pan (Medium) | Nos | 300 | 800 | 400 |

*Conditions:*

1. All specifications should be in conformity with the relevant Sri Lanka Standard or British Standard Specification where applicable. In any case every item supplied should meet with the minimum specifications for quality set out by the National Building Research Organization (NBRO).
2. All prices should be valid for a period of 90 days from the date of closing of tenders.
3. All bids should clearly indicate the ability of the bidder to transport and deliver the items to the relevant districts.
4. Any additional transport charges involved should be indicated as a separate item in the bid document.
5. All bids should include unit price and quantity discounts if any and should be made in an ex-stock basis.
6. Tenders will be received up to the close of business, on Tuesday, 20th December 2005, and tenders will be opened on Thursday, 22nd December 2005 at 10.00AM at this office. Representatives of bidders are welcome to be present at the opening if they so wish.

Tenders under **registered post only** should be forwarded to reach the under mentioned address on or before the closing date set out above and the top left hand corner of the envelope should indicate as follows: **"Echo / Supply of Materials / 01".**

**Head - Finance & Administration**
**Danish Refugee Council**
**77, 1st Cross Street**
**Vavuniya.**
**TP: 024 – 2224442/3**

(C/46681)

# தமிழர்களின் சுய உரிமையை அங்கீகரிக்க சர்வதேசம் அழுத்தம் கொடுக்கவேண்டும்

## அமெரிக்கப் பத்திரிகை வலியுறுத்து

கொழும்பு,டிசெ.10

இலங்கையில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் நீடிக்கவும் தமிழர்களது தன்னாட்சி உரிமையை அங்கீகரிக்கும் அரசியல் தீர்வுக்கான வரைபை ஏற்படுத்தவும் அமெரிக்காவும் இந்தியாவும் சர்வதேச சமூகமும் அழுத்தங்களை உருவாக்கவேண்டும்.

- இவ்வாறு நியூயோர்க் 'ரைம்ஸ்' குழுவின் இதழான 'போஸ்டன் குளோப்' தனது தலைப்புச் செய்தியில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2002ஆம் ஆண்டுமுதல் இலங்கையில் அமுலில் இருக்கும் யுத்தநிறுத்தம் முறிந்து போய் மீண்டும் யுத்தம் ஏற்படாமல் தடுப்பதற்காக இலங்கை அரசு சர்வதேச அனுசரணையாளர்களுக்கு அண்மையில் அழைப்பு விடுத்திருக்கிறது.

கடந்த மாதம் ஜனாதிபதித் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் சிங்களப் பெரும்பான்மை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே எதிர்வரும் மாதங்களில் யுத்தம் நடைபெறக்கூடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இலங்கைத் தீவின் வடபகுதியில் வாழும் தமிழர்களின் தேர்தல் புறக்கணிப்பால் இரு சிங்களக் கடும்போக்குத் தேசிய வாதக் கட்சிகளின் கூட்டணியுடன் புதிய ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றுள்ளார்.

நாடாளுமன்றத்தில் மஹிந்த ஆற்றிய உரையில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை நிராகரிப்பதாகவும் பெரும்பான்மை சிங்கள - பௌத்தர்களின் கட்டுப்பாட்டின்கீழான ஒற்றையாட்சியே நீடிக்க வேண்டும் என்றும் ஆழிப்பேரலை மீளமைப்புக்காகச் செய்யப்பட்ட பொதுக்கட்டமைப்பைக் கலைத்துவிடுவதாகவும் நோர்வே அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட அமைதி முயற்சிகளை நீக்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த உரையை அடுத்துத் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தனது வருடாந்த மாவீரர்நாள் உரையில், புதிய ஜனாதிபதிக்கும் புலிகளுக்குமிடையே பாரிய கொள்கை இடைவெளி இருப்பதாகவும் தமிழர்கள் தமது பொறுமையை இழந்து விட்டார்கள் என்றும் தமிழர் தாயகத்தின் தன்னாட்சி அரசு தொடர்பாகவும் தெரிவித்துள்ளார்.

தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் அரசியல் தீர்வுத்திட்டத்தை விரைவில் புதிய அரசு முன்வைக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். புதிய அரசு அதனை நிராகரித்தால் அடுத்த ஆண்டு எமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தைத் தொடக்கவேண்டியிருக்கும் என்றும் தல்லவர் பிரபாகரன் தனது உரையில் கூறியுள்ளார்.

இலங்கையானது சில வரையறைகளுடனான தந்திரோபாய முக்கியத்துவமான பிரதேசமாக அமெரிக்கா கருதுகிறது. ஆனால், அமெரிக்காவின் புதிய தந்திரோபாயப் பங்காளியான இந்தியா, புலிகளுக்கும் சிங்களப் பெரும்பான்மை அரசுக்கும் யுத்தம் நடைபெறுவது தொடர்பில் அச்சம் கொண்டுள்ளது - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-203)

## யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உபகரணங்கள்

வலி.கிழக்கு,டிசெ.10

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்களை வழங்குவதற்கு சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சாவகச்சேரி, தீவகம் ஆகிய பகுதியில் இதுவரை எந்தவித உதவிகளும் பெறாத மீனவர்களின் விவரங்கள் இதற்கெனத் திரட்டப்படுகின்றது.

கடற்றொழில் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தின் ஊடாக மீன்பிடி வலைகள், வள்ளங்கள் போன்ற உபகரணங்களை இந்த நிறுவனம் வழங்கவுள்ளதாகத் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் கே.தர்மலிங்கம் தெரிவித்தார்.

(த-180)



கோண்டாவில் கிழக்கு கலைமகள் பாலர் பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக் கலந்துகொண்ட நல்லூர்ப் பிரதேச சபைச் செயலாளர் பொ.வைரமுத்து மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் ஆசிரியர் திருமதி ச.இராஜேந்திரன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(த-49)

# உலக அஞ்சல் தினப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்குப் பரிசளிப்பு

வலி.கிழக்கு,டிசெ.10

சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட சித்திரம், கட்டுரை, முத்திரை சேகரித்தல் போட்டிகளில் வெற்றியீட்டிய 38 மாணவர்களுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

சர்வதேச அஞ்சல் தினமான கடந்த 7ஆம் திகதி யாழ். அஞ்சல் வளாகத்தில் உள்ள வடமாகாணப் பிரதி அஞ்சல் அதிபர் அலுவலகத்தில் அஞ்சல் அதிபர் வீ.குமரகுரு தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் இந்தப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலுள்ள பாடசாலை மாணவர்களிடையிலேயே போட்டிகள் இடம்பெற்றன.

இதேவேளை, சிறந்த சேவையாற்றிய அஞ்சல் அதிபர் தரம் I, II, அஞ்சல் அதிபர்கள், அஞ்சலகர்கள், கோல உடைப் பணியாளர்களுக்கிடையே தெரிவுசெய்யப்பட்ட 15 பேருக்கும் கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

தேசியமட்டத்தில் அஞ்சல் அலுவலகங்களில் 30 வருடங்களுக்கும் மேல் திணைக்கள நடைமுறைக்கு உட்பட்ட குற்றங்கள் இன்றிச் சேவையாற்றிய உத்தியோகத்தர், ஊழியர்கள் 38 பேருக்கும் சான்றிதழ்களும் கேடயங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி, சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கியின் வடவலயப் பொதுமுகாமையாளர் எஸ்.பாலசுப்பிரமணியம், இலங்கை வங்கிப் பிரதான கிளை முகாமையாளர் எஸ். சீவரத்தினம், ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் எஸ்.பாலச்சந்திரன், அஞ்சல் அலுவலக ஆலோசகர் குழுவின் தலைவர் எஸ்.தியாகராசா உட்பட அஞ்சல் அலுவலகப் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

(த-180)

## யாழ். மாநகரசபைச் சுகாதாரப் பிரிவில் சுகாதாரப் பரிசோதகர்கள் பற்றாக்குறை

யாழ்ப்பாணம்,டிசெ.10

யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பிரிவில் ஆளணிப்பற்றாக்குறை நிலவுகின்றது.

இதனால், சுகாதார மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதில் சிரமத்தை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

- இவ்வாறு யாழ். மாநகர சபையின் பிரதம பொதுச்சுகாதாரப் பரிசோதகர் கே.ஜீவநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

எமது சுகாதாரப் பணிகளைத் துரிதமுறையில் மேற்கொள்வதற்கு ஒன்பது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தேவைப்படுகின்றனர்.

ஆனால், ஐந்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களே தற்போது பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறையிடப்பட்டுள்ளது.

இதுவரை இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டோர் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை - என்றார் அவர்.

(த-14-12)

## வலுவிழந்தோருக்கு இடையிலான சைக்கிள் ஓட்டப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.10

உலக வலுவிழந்தோர் தினத்தை முன்னிட்டு யாழ். ஜெயப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் தனது பயனாளிகளுக்கு இடையே சைக்கிள் ஓட்டப் போட்டிகளை நடத்தியது.

அந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற போட்டியாளர்களின் விவரம் வருமாறு:-

முழங்காலிற்குக் கீழ் செயற்கைக் கால் பொருத்திய - ஆண்கள் :- முதலாம் இடம் - கதிரேசு உதயன், இரண்டாம் இடம் - இராசன் சசிக்குமார், மூன்றாம் இடம் - லோறன்ஸ் ஜெயக்குமார்.

முழங்காலிற்கு கீழ் செயற்கைக் கால் பொருத்திய பெண்கள் - முதலாம் இடம் - செல்வி கந்தசாமி ரஜனிகா, இரண்டாம் இடம் - திருமதி சிவகுமார் ரஞ்சிதமலர், மூன்றாம் இடம் - திருமதி மேத்தானந்தம் இந் திராகாந்தி,

முழங்காலிற்கு மேல் செயற்கைக் கால் பொருத்திய ஆண்கள் - முதலாம் இடம் : முருகேசு பொன்னுத்துரை, இரண்டாம் இடம் - டோனால்ற் கமில்ரன், மூன்றாம் இடம் - எட்வேட் பெலிக்ஸ் ஜோய்.

முச்சக்கரவண்டி ஓட்டப் போட்டி பெண்கள் - முதலாம் இடம் - கார்த்திகேசு லதா,

முச்சக்கர வண்டி ஓட்டப் போட்டி ஆண்கள் முதலாம் இடம் - சேவியர் மோகன்ராஜ், இரண்டாம் இடம் - சிங்கநாயகம் காந்தரூபன், மூன்றாம் இடம் - பரமு பத்மநாதன்.

(த-190)

## நிவாரண முத்திரையைப் பெறக் கோரிக்கை

தென்மராட்சி,டிசெ.10

எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரிவு குடும்பங்களுக்கான இடம்பெயர்ந்தோர் நிவாரண முத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மக்கள் தமக்குரிய நிவாரண முத்திரைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கிராம அலுவலர் பொ.நவரத்தினராசா அறிவித்துள்ளார்.

(த-117)

## பொற்பதியில் 121 நிரந்தர வீடுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.10

கடந்த வருடம் இடம்பெற்ற ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது வீடுகளை இழந்த மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள பொற்பதி கிராம மக்களுக்கு 'வேள்ட் விஷன்' நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுக்கவுள்ளது.

சுமார் 121 குடும்பங்களுக்கான நிரந்தர வீடுகள் அமைக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அந்த நிறுவன அதிகாரி தெரிவித்தார்.

(3-190-202)



உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான வருடாந்த சைவத்திருமுறை விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் கடந்த புதனன் புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் சமய குரவர்களினதும் ஆறுமுகநாவலரினதும் உருவப்படங்கள் புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்திவிநாயகர் ஆலயத்தில் இரு மாணவர்களால் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்படுவதையும் -

கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் கோட்டக் கொடியேற்றுவதையும் மற்றும் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்க

(படங்கள்: நேச

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை 2005

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2005 இல் 96 மாணவர்களைச் சித்தியடையச் செய்ததன் மூலம் யாழ். மாவட்டத்திலும், வடக்கு கிழக்கு - மாகாணத்திலும், அகில இலங்கையிலும் முன்னணி வகிப்பதற்கு உயர்த்தி நிற்கும் அதிபர், உபஅதிபர், பகுதித்தலைவர்கள், தர இணைப்பாளர்கள், ஆசிரியப் பெருந்தகைகள் அனைவரையும் மனம்நிறைந்து நன்றியுணர்வோடு பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வெய்துகின்றோம்.

**இன்று [10.12.2005] சனிக்கிழமை காலை நடைபெறும் 2005இற்கான பரிசளிப்பு விழாவில் தங்கப்பதக்கங்களை பெறும் மாணவர்கள்.**



மி.துமிலன் – மாவட்ட நிலை -03 – 168
மோ.மோகனலக்ஷன் – மாவட்ட நிலை -08 – 164
பா.சங்கீர்த்தன் – மாவட்ட நிலை -12 – 162
சி.சஞ்ஜீவன் – மாவட்ட நிலை -16 – 161
ப.கோபிகா – மாவட்ட நிலை -20 – 160
ஜெ.ஷஜீஹன் – மாவட்ட நிலை-20 – 160
கு.கௌசிகாந் – மாவட்ட நிலை-25 – 158
சோ.திரியம்பகி – மாவட்ட நிலை-25 – 158
மோ.சோபிதன் – மாவட்ட நிலை-33 – 157
பே.பிரசாந்தன் – மாவட்ட நிலை-39 – 157
ம.பிரகாஷ் – மாவட்ட நிலை-39 – 156
யோ.ஜனார்த்தனன் – மாவட்ட நிலை-45 – 155
இ.பிரசாந்தன் – மாவட்ட நிலை-53 – 154
இ.விதுஷன் – மாவட்ட நிலை-53 – 154
செ.தயாகரன் – மாவட்ட நிலை-79 – 151

## பரிசில்களையும் பதக்கங்களையும் பெற்றுக் கொள்ளும் மாணவர்கள்



க.இராகுலன்-149, இ.துஷாந்-149, கு.கோபிசாந்த்-149, வி.பருஷன்-148, உ.பிரணவன்-147, ந.பதும்பிரியன்-147, சி.அர்ஷனன்-145, க.பவந்திணி-145, ம.வாத்சல்யா-144, த.விதுஷன்-143,
ஆ.மயூரகீர்த்தன்-143, ச.திலக்ஷன்-143, ப.மைவலிகா-143, ஞா.கௌதமி-142, து.வைசிகா-141, சி.சிவசங்கரி-140, ஜெ.ஜெசிந்தன்-140, சி.சாரங்கன்-140, அ.திருவேந்தன்-139, வே.கோகுலன்-139,
சி.சிவரதன்-138, க.பவஜனன்-138, செ.சிவாநுஜன்-138, இ.அஜந்தா-138, ம.கம்சிகன்-138, மு.விஷாகன்-138, ஜமா.காவேரி-138, க.திருக்குமரன்-137, சி.சாந்தசாரணி-136, அ.யதுஷினா-136,
கு.உமாசுதன்-136, இ.ஹரிசங்கர்-136, பு.சிந்துஜன்-135, சி.கோகுலக்கவினா-135, ஜெ.தமிழ்ச்செல்வன்-135, ஜனா.ஆரபி-135, சொ.சாஜிதன்-134, க.பிரணவன்-134, இ.நிதர்சனா-134, சி.அற்புதன்-134,
ச.அனுஷன்-134, சி.ஹரிவிக்னேஷ்-134, ச.துஷாந்ஜெயன்-133, சி.லக்ஷ்மன்-133, சி.யதுசா-133, ஆ.கிருஷிகன்-133, ச.பானுஷா-132, சி.சுதாகரன்-132, ஆ.கௌரிசங்கர்-132, ஜெ.சஜீவன்-132,
வ.சங்கீர்த்தா-132, ஜசா.அபிராமி-131, ப.சிவஜனன்-131, சி.அநுஷன்-130, கு.நிருபா-130, பா.ஜனுசியா-130, க.சிவானுஜன்-128, ர.வித்தியசங்கரி-128, பு.கேனிலன்-128, சி.சாமினி-128,
சி.மாதங்கி-128, இ.லங்கீஷா-128, சி.சிவகாந்-127, பி.ஹரிராஜ்-127, இ.அனித்தா-127, அ.நிருபன்-127, ஜெ.கஸ்தூரி-127, ஜெ.சுபாங்கன்-126, அ.சிவராஜ்சிதன்-126, க.கிரிசாந்-126,
வி.அபிராம்-126, ச.நிஷாந்-126, கு.தக்ஷிணி-125, கா.திலக்ஷன்-125, ந.அமரகஜசாந்-125, ஜெ.துவாரகா-125, ஜெ.பானுகோபன்-124, இ.வரணிதா-124, சி.மதுஷன்-124, ஜமா.பிரவீன்-124,
சி.சாரங்கன்-124

இவர்களையும் இவர்களோடு கல்வி கற்ற ஏனைய மாணவர்களையும் சகல கலைகளையும் பெற்று, கல்வியில் சிறப்புற வாழ்த்துவதோடு தரம் 1 தொடக்கம் தரம் 5வரை கல்விச்செயற்பாடுகளிலும் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் கருத்தூன்ற வைத்து உன்னத நிலைக்கு வித்திட்ட பாடசாலைக்கு ஒருதொகுதி தளபாட உபகரணங்களைக் கையளிப்பதோடு சகல ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் நன்றிகலந்த கௌரவிப்புக்களையும் பாராட்டுக்களையும் இன்று பி.ப. 2 மணிக்கு பெருவிழா எடுத்து சிறப்பிப்பதைமிட்டு பெருமையும் பேருவகையும் அடைகின்றோம். பாடசாலை தொடர்ந்தும் பல முன்னேற்றகரமான சாதனைகளைப் படைத்து வெற்றிவாகைகளைச் சூடவும் அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள் நலமும் வளமும் பெருக வாழ்வாங்கு வாழவும் வாழ்த்துகின்றோம்.

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தரம் 5 மாணவர்களின் பெற்றோர்கள்.

யாழ் வைத்தியசாலை
284, பலாலி வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம். தொலைபேசி:021-2223533

சுமங்கலி ஜுவல்ஸ்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி:021-2229305

சாரங்கா நகை மாடம்
157/1,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021-2222480 021-2226972

சாரங்கன் நகை மாடம்
45,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021-2226059

## மக்கள் சேவையில்

வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் (மாணவர் அபிவிருத்தி) குமார சாமி சண்முகநாதன் ஓய்வுபெற்றுள்ளார்.

சுமார் இருபது வருடங்கள் ஆசிரியப் பணிபுரிந்துவந்த கு.சண்முகநாதன் 14 வருடங் களாக அதிபராகவும் 15 வருடம் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் (NIE) கடமையாற்றி, கடந்த ஒரு வருடமாக வலிகாமம் கல்வி வலயத்தில் மாணவர்களின் கல்வி அபிவிருத் திக்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.

இலங்கை அதிபர் சேவையின் முதலாம்தர அதிபராக விளங்கிய இவர், யாழ்ப்பாணம், கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம், மானிப்பாய் இந்துக் கல்லூரி என்பவற்றின் அதி பராக இருந்து அவற்றின் வளர்ச்சிக்காக உழைத்துள்ளார்.

ஆத்மீகத்துறையில் சிறந்து விளங்கும் இவர். சிறந்த தொரு சாயி பக்தராகவும் விளங்கி வருகிறார். (3-152)

* * *

யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள உதவி விவசாயப்பணிப்பாளராக எஸ்.ஜெகநாதன் நியமிக்கப்படவுள்ளார்.

இதுவரை காலமும் கடமையாற்றிய எஸ்.செல்வராசா பேராதனைப் பல்கலைக்கழக முதுமாணி கற்கைநெறிக்காகச் சென்றுள்ளார்.

தற்போது திருகோணமலை மாகாண விவசாயத் திணைக்களத்தில் கடமையாற்றும் எஸ்.ஜெகநாதன் டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி யாழ். மாவட்ட விவசாய உதவிப் பணிப் பாளராகத் தமது கடமையைப் பொறுப்பேற்கவுள்ளார். (ஐ-180)

* * *

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராக திருமதி அ.வேதநாயகம் கடந்த 28ஆம் திகதி தொடக்கம் கடமையாற்றிவருகிறார்.

இவர் முன்னர் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் கல்வி அபிவிருத்திப் பணிப்பாளராகக் கடமையாற்றிவந்தார். (204-37)

# வலி.தென்மேற்குப் பிரிவில் குவைத் நட்டஈடு பெறுவோர்

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் குவைத் நட்ட ஈட்டுக் கொடுப்பன விற்குத் தெரிவானவர்களின் பெயர் விவரங் களைச் சண்டிலிப்பாய் (வலி.தெ.மே.) பிர தேச செயலகத்திற்கு அனுப்பிவைத்துள்ளது.

கீழ்வரும் பெயர்களை உடையவர்கள் எதிர்வரும் 30ஆம் திகதிக்குள் கொழும் பிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் தொடர்புகொள்ளுமாறு பிர தேச செயலாளர் திருமதி ரூபினி வரதலிங் கம் கேட்டுள்ளார்.

நட்ட ஈடு தொடர்பான மேலதிக விவரங் களைப் பெறுவதற்கு 0112864101, 0112 864105 ஆகிய தொலைபேசி இலக்கங்களு டன் தொடர்புகொள்ளுமாறும் அறிவிக்கப் பட்டுள்ளது.

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய்ப் பிர தேச செயலாளர் பிரிவுற்குள் தெரிவானவர் களின் விவரம் வருமாறு:-

எஸ்.ஈ.ஜோசப் (சில்லாலை தெற்கு), ஆர். விக்கினேஸ்வரன் (பண்டத்தரிப்பு, அம்மன் வீதி), எஸ்.ஏ.யூபேர்ட் (சில்லாலை வடக்கு), கே.சின்னத்தம்பி (மாதகல் அம்மன் கோயி லடி), ஆர்.பரமேஸ்வரன் (மாதகல் அம்மன் கோயிலடி), டபிள்யூ.பி. செல்லத்துரை (மாத கல் வடக்கு), வி.செல்லத்துரை (மாதகல் மேற்கு) - ரி.கடம்பமூர்த்தி, மாதகல் சென். அன் ரனீஸ் லேன்), ஆர்.தவராஜன் (மே/பா, ரி.ஜெயக் குமார், சண்டிலிப்பாய் வடக்கு), ஜி.கதிர வேலு (மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்), ஜெ.செல் லத்துரை (மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்), எஸ்.சி.செல்லத்துரை (சுதுமலை தெற்கு, ஆனைக்கோட்டை) -

என்.ஜெயக்குமார் (ஐங்கரன் றோட், சுது மலை தெற்கு), ஜெ.ஏ.ஜெயகாந் (நவாலி தெற்கு), ஜெ.ஏ.ஜெயகாந்தி (நவாலி தெற்கு), ஏ.எல்வின் (எச்சாட்டி வைரவர் கோயிலடி, சுதுமலை தெற்கு),எஸ்.விக்னேஸ்வரன் (நவாலி வடக்கு), எஸ்.ரவிச்சந்திரன் (வட லித்தோட் டம் வடக்கு, மானிப்பாய்) -

எஸ்.சண்முகம் (நவாலி தெற்கு), எஸ்.எம். சுரேஷ்குமார் (நவாலி), கே.விக்கினேஸ்வரன் (மானிப்பாய் மேற்கு), சற்.என்.முகமட் (மே/பா, சுப்பிரமணியம், மாகியப் பிட்டி), என்.புவ னேந்திரன் (சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக் கோட்டை), ஜெ.அகஸ்ரீன் (சென். ஜேம்ஸ், இளவாலை), கே.எஸ், பரமானந்தம் (சிறிரங் கம், பெரியவிளான் இளவாலை), எஸ்.எம்லி யானஸ் (சில்லாலை), எம்.றொபேட் வில் லியம் (சில்லாலை).

நட்டஈடு தொடர்பான மேலதிக விவரங் களைப் பெறவிரும்புவோர் வலி.தென் மேற்குப் பிரதேச செயலக மனிதவளங்கள் அபிவிருத்தி உதவியாளருடன் தொடர்பு கொள்ளலாம் என்று பிரதேச செயலாளர் கேட் டுள்ளார். (த-185)

## வரவு - செலவுத்திட்டத்தை ஐ.தே.க.எதிர்க்க மாட்டாது

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பு அரசு இரண்டாவது தடவையும் அறிவித்த வரவு - செலவுத்திட்டத்தில் வேலைவாய்ப்பு உருவாக்குதல், வாழ்க்கைச் செலவைக் குறைத் தல், சம்பள உயர்வு மற்றும் வறுமை ஒழிப்புத் தொடர்பாக எந்தவித ஆக்கபூர்வமான அம் சங்களும் இடம்பெறவில்லை எனப் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

புதிய ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்ட வரவு - செலவுத்திட்ட அறிக்கையில் பல குறை பாடுகள் காணப்பட்டாலும் வரவு - செலவுத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் வாக் களிப்பை தவிர்ப்பதாகவும் ஐ.தே.க. தெரி வித்தது. (எ-க)

# நூல் விசை

**நூல்** : சத்திய விஞ்ஞானம்
**ஆசிரியர்** : புலவர் பாண்டியனார் இ.இரத்தினம்
**வெளியீடு** : அ.இ.காந்தியசேவா சங்கம்



காந்திய கொள்கைகள் மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றன. 1948ஆம் ஆண்டு வெளிவரத் தொடங்கிய 'காந்தியம்' இடையில் சிறிதுகாலம் தடைப்பட்டு, 1968 முதல் மீண்டும் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டது. புலவர் கருணா லய பாண்டியனார் இ.இரத்தினம் இதன் ஆசிரியராக இருந்து காந் தியத்துக்கான தலையங்கங்களை எழுதி வந்தார். அவரால் எழுதப்பட்ட தலையங்கங்களுள் முக்கியமான 75 தலையங்கங் களைத் தெரிந்தெடுத்து "சத்தியஞானம்" என்ற பெயரில் அகில இலங்கை காந்திய சேவா சங்கத்தினர் நூலுருவாக்கி வெளியிட்டுள்ளனர்.

மகாத்மா காந்தியின் புகைப்படத்தை அட்டைப்படமாகத் தாங்கி நூல் வெளி யிடப்பட்டுள்ளது. புலவர் பாண்டியனார் இ.இரத்தினத்தின் வாழ்க்கைக் குறிப்புக்கள் புகைப்படங்களுடன் அமைந்துள்ளன. முது பெரும்புலவர் கலாபூஷணம் வை.க.சிற்றம் பலம் சிறப்பாயிரம் எழுதியுள்ளார். செல்வி ஞா.மணிமேகலையால் கணனி வடிவ மைக்கப்பட்டு, திருநெல்வேலி அம்பாள் பிரின்டேசால் அச்சுப் பதிவுசெய்யப்பட்டு நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

காந்தி அடிகளின் வாழ்க்கை வரலாறு மிகநுட்பமாகவும், எளிமையாகவும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தலையங்கமும் காந்தியடிகளை விளங்கிக்கொள் வதற்கு ஆதாரமாக அமைந்துள்ளன. ஆத்மீகமும் ஆரசியலும் கலந்ததுதான் காந்தி அடிகளின் கொள்கையாக இருந்துள்ளது.

மெய்ஞானத்தின் முதற்படி தான் விஞ்ஞானம். மனித நோயம் இல்லாத விஞ் ஞானம் கொடியது என்பதை காந்தியடிகள் வலியுறுத்தியுள்ளார்.

தீண்டாமை, தொழிலாளி - முதலாளி தொடர்புகள், கல்வி, அன்பு, உடல் ஆரோக் கியம், பொருளாதாரம், நற்பண்புகள் போன்றன அவ்வப்போது அவசியமாகக் காணப் பட்ட பல்வேறு விடயங்களைக் கருத்திற்கொண்டு அவற்றை காந்தியத்துடன் தொடர்புபடுத்தி தலையங்கங்கள் பலவும் எழுதப்பட்டுள்ளன.

காந்தியம் தொடர்பான பல அரிய விடயங்களை உள்ளடக்கி வெளியிடப்பட் டுள்ள இந்நூலை வாசித்து விளக்கிக்கொள்வதில் சிறிது சிரமம் இருப்பதாகத் தோன் றினாலும் இந்தநூல் மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்பது உறுதியாகும்.

**- விஸ்வபரி**



**நூல்** : அளவையியலும் விஞ்ஞானமுறையும் பகுதி II
(இரண்டாம் தொகுதி)
**நூலாசிரியர்** : எஸ்.எஸ்.மனோகரன்
(B.com.Dip-in-Ed,M.phil.Q (Philosophy)) உடுவில் மகளிர் கல்லூரி.

உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியர் எஸ்.எஸ். மனோகரன் எழு திய அளவையியலும் விஞ்ஞானமுறையும் - இரண்டாம் தொகுதி நூல் வெளிவந்துள்ளது.

அளவையியலும் விஞ்ஞானமுறையும் எனும் பாடத்தினை வளர்க்க மேற்கொண்ட ஒரு முயற்சியாகவே இவ் பகுதி11இற்கு ரிய இரண்டாம் தொகுதி நூல் அமைகிறது.கல்வி உலகில் நீண்ட கா லமாக சேவையில் ஈடுபட்டுள்ள ஆசிரியரின் சுயமாகத் தகவலைத் தேடும்திறன், நுட் பமான கிரகித்தல்திறன், ஆயராதமுயற்சி போன்றவற்றின் ஒருங்கிணைவே அளவை யியல் பாடத்தில் பல நூல்களை வெளியீடு செய்யக் காரணமாக அமைந்துள்ளது.

"அளவையியலும் விஞ்ஞானமுறையும்" எனும் பாடத்தைக் கற்கும் மாணவர்களின் நலன் கருதி புதிய பாடத்திட்டத்திற்கேற்ப வினா -விடை அமைப்பு வடிவில் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. இங்கு *சமூக விஞ்ஞானமும், பெறுமான விஞ்ஞானம், புள்ளிவிவரவியல், நிகழ்தகவு, சட்டத்துறை சார்ந்த விடயங்கள், சிறுகட்டுரைகள்* போன்றவிடயங்கள் மிக ஆழ மாக ஆராயப்பட்டுள்ளது. அத்துடன் ஒவ்வொரு பகுதிக்கும் கீழே கடந்தகால பரீட்சை வினாக்களும், அவற்றின் அமைப்பு வடிவங்களும், வினாக்களில் இடம்பெற்றுள்ள வெவ் வேறு விதமான பதப் பிரயோகங்களும் குறிப்பிடப்பட்டுள்ளமை இந்நூலின் ஒரு விசேட அம்சம் ஆகும்.

இந்நூல் மாணவர்களுக்கு மாத்திரமன்றி அளவையியலைக் கற்பிக்கும் ஆசிரியர் களுக்கும் பயனுள்ளதாக அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. என் போன்ற அளவையயியல் சிறார்களை உருவாக்கிய இவ்வாசிரியரின்பணி அளவையியல் உல கில் போற்றுதற்குரியது.

**ஆர்.எஸ்.சந்திரன்** (ஆசிரியர்)

# சமாதான காலத்தில் அரச பயங்கரவாதக் கொடூரத்தால் ஊசலாடும் சமாதானச் செயற்பாடுகள் மோசமடையும்

## சகோதரிகள் கொலை தொடர்பாக புலிகளின் மட்டு. அரசியல்துறை விசனம்

மட்டக்களப்பு மாவட்ட வந்தாறுமூலையில் சகோதரிகள் இருவர் ஒரே வீட்டில் வைத்து இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல் லப்பட்ட சம்பவத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அரசியல்துறை விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

கடந்த சுமார் நான்காண்டு காலப் போர் நிறுத்தத்தை மிக மோசமாகப் பாதித்துவரும் ஒட்டுப்படைகளின் செயற்பாட்டைக் கட்டுப் படுத்தும்படி மாறிமாறி வந்த ஆட்சியாளர் களிடம் விடுதலைப் புலிகளும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும், மனித உரிமை அமைப்புகளும் மற்றும் சமாதானத்தின்பால் ஆர்வமுள்ள அனைவரும் மீண்டும் மீண்டும் வேண்டுகோள் விடுத்தும் செவிடன் காதில் ஊதிய சங்காக அந்தக் கோரிக்கைகளும், விண் ணப்பங்களும் அரசால் தாட்சண்யமின்றி உதா சீனம் செய்யப்பட்டு வந்ததை அனைவரும் அறி வோம்.

அரச புலனாய்வினரும் அவர்களின் கூலிப் படையாக இயங்கிவரும் ஒட்டுப்படைகளும் கண்ணியமற்ற முறையில் இங்கே செயற் படுத்தி வரும் அராஜகம் இன்று ஒரு சகிக்க முடியாத விளிம்பிற்கு வந்திருக்கிறது. அவர் களால் வளர்க்கப்பட்டவர்களே அவர்களின் இன விரோத மற்றும் தார்மீகமற்ற செயற்பாடு களை ஏற்றுக்கொள்ள முடியாமல் தங்களின் மேலாளர்களைத் தாக்கியழித்து விட்டு எம் மிடம் சரணடையும் சம்பவங்கள் கடந்த வரு டத்திலிருந்து மிகத்தீவிரமடைந்து வருவது அனைவருக்கும் தெரியும்.

ஆயுத முனையில் விடுதலை உணர்வை மழுங்கடிப்பதற்காகக் கொள்கை நெறியற்ற கும்பல்களை அரச பயங்கரவாதம் வளர்த்து விடும்போது இவ்வகையான பின்விளை வுகள் வருவது இயல்பே. அதுதான் கடந்த 6 ஆம் திகதி அம்பாறையில் நடந்தது. தம்மை வளர்த்தவர்களின் தார்மீகமற்ற செயல்களால் அதிருப்தியடைந்த இரு இளைஞர்கள் தமது மேலாளர்களைத் தாக்கியழித்துவிட்டு தார்மீக சக்தியின்பால் சரணடைந்திருந்தார்கள்.

இச்சம்பவத்தால், தங்கள் உள்முரண்பாடுகள் முற்றி கொள்கையற்ற மற்றும் எதிர்காலமற்ற நிலைப்பாட்டால் எஞ்சியிருக்கும் சிறு தொகை யினரும் உணர்ந்து கிளர்ந்து வெளியேறத் தலைப்படுவார்கள். என்றஞ்சிய ஒட்டுப் படை களும் போரினை வேகமாகத் தூண்டிவிடு வதற்கான காரணங்களைத் தேடிவரும் அரச புலனாய்வுப் பயங்கரவாதிகளும் நேற்றிரவு அவர் களின் அதிருப்தியாளர்களில் ஒருவரான புகழ் வேந்தன் என்பவரின் வீட்டிற்குச் சென்று அங்கே உறங்கிக்கொண்டிருந்த அவரின் சகோதரி களான யோகராஜா யோகேஸ்வரி (வயது 24), குகன் வதனி (வயது 18) மற்றும் யோகேஸ் வரியின் இரு வயதுக் குழந்தையான யோக ராசா திசா ஆகிய மூவரையும் சுட்டுத்தள்ளி யிருக்கின்றார்கள்.

சகோதரிகள் இருவரும் அவ்விடத்திலேயே இறந்துவிட குழந்தை இப்போது பாரதூரமான நிலையில் மருத்துவ சிகிச்சையில் இருக்கிறது. யோகேஸ்வரியின் நான்கே மாதக் குழந்தை யொன்றும் வதனியின் ஒரு மாதக் குழந்தை யொன்றும் இப்போது தாயை இழந்து தவிக் கின்றன. ஆயுதமேந்தியவர்களை நேரடியாகச் சந்திக்கும் திராணியில்லாத நிலையில் அப் பாவிகளைக் குரூரமாகப் பழிவாங்குவது அரச பயங்கரவாதத்திற்கு ஒன்றும் புதிய வேலை யல்ல. இப்போது சமாதானம் என்று சொல்லிக் கொள்ளப்படும் காலத்தில் இத்தகைய கொடூ ரம் நிகழ்ந்திருப்பது மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை உண்டாக்கியிருக்கிறது.

இதன் பின்விளைவுகள் மக்களின் இயல்பு வாழ்க்கையையும் அதனூடாக நலிவடைந்து ஊசலாடும் சமாதானச் செயற்பாடுகளையும் மிக மோசமாகத் தாக்கும் என்பதில் ஐயமில்லை. தவிர, ஆயுதங்களைக் கையிலேந்தாதவர்களின் பாதுகாப்புக்குறித்துக் கரிசனையுள்ள அமைப் புகள் உடனடியாகச் செயற்பட்டு இதற்கான பின்னணியை வெளிக்கொணர்வதுடன் இத் தகைய சம்பவங்கள் மேலும் இடம்பெறாதி ருப்பதற்கான காத்திரமான முயற்சியில் ஈடு படவேண்டும். மனித உரிமை ஆர்வலர்களும் ஐ.நா. மனித உரிமை அமைப்புகளும் இதில் உடனடிக் கவனம் எடுத்து ஒட்டுப்படை களின் செயற்பாட்டிற்கும் அரச புலனாய்வுப் பயங்கரவாதத்திற்கும் உடனடி முடிவு கட்டு வதற்கான தீர்க்கமான அழுத்தத்தை ஸ்ரீலங்கா அரசிற்குக் கொடுக்க வேண்டும் என்று வேண்டு கோள் விடுக்கிறோம்.

உள்ளூர் மகளிர் அமைப்புகளும் அரச சார் பற்ற நிறுவனங்களும் இந்தப் பாதகச் செய லுக்கு எதிராகப் போராட வேண்டியது அவசிய மாகும். இந்தத் தருணத்தில் தார்மீக சக்திகள் அனைவரும் ஒருங்கிணைந்து தீவிரமாகச் செயற்படாதுவிடின் மனித உரிமைகள் சார் பான இனியெந்த நடவடிக்கைகளும் அர்த்த மற்றுப் போய்விடும் அபாயம் உள்ளதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அநியாயமாகக் கொல்லப்பட்ட அந்த அப் பாவிச் சகோதரிகளின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக் கின்றோம். இலங்கைத் தீவில் வாழும் அனைத்து நடுநிலைநாட்டுப் பிரதிநிதிகளும் இந்த அனுதாபத் தெரிவிப்பில் பங்குகொள்வ தோடு அரச பயங்கரவாதத்திற்கு எதிரான அழுத்தத்தை தரவேண்டும் என்றும் வேண் டுகிறோம் - என்று உள்ளது. (க)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள சிசில் பிறிச், யப்பான் ஏசியா துவிச்சக்கர வண்டி (பெண்கள்), காஸ் அடுப்பு சிலிண்டர் உட்பட வீட்டுப் பாவனையில் உள்ள தளபாடங்கள் (அலுமாரி, மேசை, கதிரைகள்), சிறிய துவிச்சக்கர வண்டி (½ ஆண்கள்), சிறிய T.V. என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.36, சங்கிலியன் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.(43814)

MP.JR xxxx C.B.Z Star, M.P.JR xxxx Ambition மோட்டார் (அம்பின்) சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777-620663. (43822)

## காணியுடன் வீடு விற்பனைக்கு

தும்பளை பிரதான வீதியிலிருந்து 200m தூரத்தில் இயற்றாவளை பிள்ளையார் கோயில் வீதி, தும்பளையில் வீடு விற்பனைக்குண்டு. தொடர்புக்கு: 0776199786. (43790)

## நாய்கள் விற்பனைக்கு

கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட றொடீசியன் றிச்பக் இன ஆண், பெண்கள் நாய்களும், ஜேர்மன் செப்பேட் இன ஆண் நாயும், டொமன் (டொமன் & காலிக்குயின்) பெண் நாயும் விற்பனைக்குண்டு. தொடர்பு: செல்லையா உருத்திரா, கேணியடி, கொக்குவில் மேற்கு. (43820)

சுத்தமான Dobermann Pincher நாய்க் குட்டிகள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (43784)

## மோட்டார் சைக்கிள், கார் வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு இருபாலாருக்கும் மோட்டார் சைக்கிள், மோட்டார் கார் வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன் குளிரூட்டப்பட்ட திருமணக்காரும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 360/10, பிரதான வீதி, (பஸ்ரியான் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். T.P.No.021-222 9154, 0777 - 593 722, 0776991899. (43206)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (43786)

புறொயிலர் 1Kg 140/=, சுத்தம் செய்தது 210/= மற்றும் கல்பேட் சேவல் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: New R.S.K Farm மானிப்பாய் றோட், பெரிய மதவடி உடுவில் மற்றும் மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (43816)

## தவறிவிட்டது

255, அரசடி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த சிவபுரநாதன் கமலகரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (841520718V) 27.11.2005 அன்று யாழ். நாவலர் மகாவித்தியாலயத்திற்கும் கந்தர் மடத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0777765213 என்னும் T.P. இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (43743)

இல.6 , மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள மோட்டார் சைக்கிளின் காப்புறுதிப் பத்திரம், வரி அனுமதிப்பத்திரம், என்பன தவறிவிட்டது. தயவுசெய்து மேல் உள்ள முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். பா. டெனிசியா T.P.0713055857,M/N/NPJC 7523 (43835)

புதிய செம்மணி வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம் என்ற முகவரியை உடைய குமரகுரு சதீஸ் என்பவருடைய தே.அ.அ (இல.833503596V) ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பிறவுன்ஸ் (சாப்) கொம்பனி, 89, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். T.P. 021-222 5150. (43833)

**Refresh System**

*புதிய, பழைய கணனிகள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும். தொடர்பு: சுதுமலை, மானிப்பாய்,077-3253104, 077-6279671.*

(43247)(42.32.19.11)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 12.12.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக்கிளைகளிலும், கரன் ஆலடி - உடுவில், நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். தை மாதம் Broiler கோழிகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்பதால் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும். (43785)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1974 அத்தம் கன்னிராசி, உயரம் 5'10'', கிரகபாவம் 43¼, C.I.M.A. கொழும்பில் பிரபல கம்பனியில் வர்த்தக முகாமையாளராகப் பணிபுரிபவருக்கு டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன் பட்டதாரி மணப்பெண் தேவை. கொழும்பில் வீடு எதிர்பார்க்கப்படும். தொடர்பு: திரு.S.K. சிவகரன், சிவாலயா சர்வதேச திருமண நிலையம், இல.11, யமுனா வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் T.P.: 0776528641. (43829)

**ORGAN/VIOLIN NOTES**

சினிமாப் பாடல்களுக்கான இசைக்குறிப்புகள் பாகம் 41 கேள்வி ஞானம், மேற்கத்தேய இசைபற்றித்தெரிந்து கொள்வோம். Key Board Exersice ஆகிய புத்தகங்கள் விற்பனைக்குண்டு. (43781)

**S.S.Rajeendran**
Karaweena Isai Manram, 75,Temple Road, Nallur, Jaffna. T.P No. 0713055991

**கோபாலையரின்**
தமிழ் இலக்கணப் பேரகராதி
*17 தொகுதிகள்*
**சேமமடு பொத்தகசாலை**
UG.52,பீப்பிள்ஸ் பார்க்,
கொழும்பு-11,
011-2331475 பெற்றுக்கொள்ளலாம்.

# வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச சபை, கரவெட்டி
## சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான
## மீள்கேள்வி அறிவித்தல் - 2006

01. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: 2005-12-16 பிற்பகல் 15.30 மணிவரை
02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி : 2005-12-19 நண்பகல் 12 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி : 2005-12-19 பிற்பகல் 15 மணி
04. கேள்வித் தொகை கேள்விப்பத்திரப் பணம் ஆகியவற்றிற்குப் பெறுமதி சேர்க்கப்பட்டவரி 15% சேர்த்து அறவிடப்படும்.
05. கேள்விப்படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிட்டு கடித உறையில் கேள்வியின் தன்மை குறிப்பிட்டு உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக எமக்கு பதிவஞ்சலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்தில் சேர்ப்பித்தல் மூலமோ கிடைக்கச் செய்தல் வேண்டும்.
06. மேலதிக விவரங்களை அந்தந்த உபஅலுவல்கங்களிலும் தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விவரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் |
|---|---|---|---|
| **நெல்லியடி உபஅலுவலகம்** | | | |
| 01. நெல்லியடி மரக்கறிச்சந்தை | 1,050,000.00 | 20,000.00 | 1,000.00 |
| 02. நெல்லியடி மீன்சந்தை | 76,650.00 | 2,000.00 | 250.00 |
| 03. கோவிற்சந்தை (துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் உட்பட) | 15,750.00 | 3,500.00 | 250.00 |
| 04. கொட்டடிச்சந்தை | 2,000.00 | 500.00 | 250.00 |
| 05. நெல்லியடி துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் | 175,000.00 | 10,000.00 | 250.00 |
| 06. நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை இல.1 | 44,600.00 | 500.00 | 250.00 |
| 07. நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை இல.2 | 44,600.00 | 500.00 | 250.00 |
| 08. நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை இல.3 | 44,600.00 | 500.00 | 250.00 |
| 09. நெல்லியடி மாட்டிறைச்சிக்கடை | 242,600.00 | 3,000.00 | 250.00 |
| 10.கோவிற்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 10,600,00 | 500.00 | 250.00 |
| **உடுப்பிட்டி உபஅலுவலகம்** | | | |
| 11. நவிண்டில் சந்தை | 4,250.00 | 500.00 | 250.00 |
| 12. உடுப்பிட்டி ஆட்டிறைச்சிக்கடை | 5,400.00 | 500.00 | 250.00 |
| **கட்டைவேலி உபஅலுவலகம்** | | | |
| 13. துன்னாலை வடக்கு சந்தை | 500.00 | 500.00 | 250.00 |

திரு.சி.வே.குலநாயகம்,
செயலாளர்,
**வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச சபை, கரவெட்டி,**
08-12-2005

(சி/46707)
(26-16.45)

**SAAMSTECH இன்**
**WEB & INTERNET**

உங்களுக்கான, குடும்பத்துக்கான, நிறுவனத்துக்கான இணையதளத்தினை நீங்களே அமைத்துக்கொள்ளலாம்

**இணையதள வடிவமைப்பு பயிற்சிநெறி**

காலம் : 1 மாதம்
கல்வித்தகுதி : க.பொ.த சா.த
கட்டணம் : ரூபா 3000/-

பாட அலகுகள் : Internet Fundamental, Web Fundamental, Front Page, Dream Weaver HTML, CSS, Jaca Script, Server Scripting, e-commerce, e-business and more..

பாடநெறியின் முடிவில் சுயமாக இணையதளங்களை வடிவமைக்கலாம், இணையதளமூடான வியாபாரங்களை நடாத்தலாம், உலகளாவிய அளவில் அதிக ஊதியத்துடன் தொழில்வாய்ப்பை பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு : பாடநெறியின் முடிவில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகள் பெறுவோருக்கு எமது இணையதள பிரிவில் பணிநியமனம்

**விசேட சலுகை**

இன்றும் நாளையும் பதிவு செய்வோருக்கு விரும்பிய பெயரில் ரூபா 10,000/- பெறுமதியான .COM இணையதளம் மற்றும் ஒரு வருடத்துக்கான HOSTING சேவை என்பன முற்றிலும் இலவசம்

பதிவுகளுக்கு
**SAAMSTECH**
841, Hospital Road, Jaffna 021 - 4591571
233/4, Kasthuriar Road, Jaffna 021 - 2229505

**5ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



பிறப்பு 24 - 08 - 1977
வீரச்சாவு 10 - 12 - 2000

**மேஜர் அரிச்சுனன்/ இளமுருகன்**
**இராஜலிங்கம் பவான்**

நாங்கள் நடந்தோம்
நீ விழுந்தாய்....
நாங்கள் நடக்கின்றோம்
நாளை
நீ எழுவாய்....

நண்பர்கள்.

(43825) (39-21-16-45)

# பொது மண்டப நிர்மாணிப்புப் பணிகள் மந்தகதியில்

அனலைதீவு, டிசெ.10

அனலைதீவு தெற்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் பொது மண்டப நிர்மாணிப்புப் பணிகள் மந்தகதியில் நடைபெற்று வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

'நிகொட்' திட்டத்தின் கீழ் அனலைதீவு தெற்கு, அனலைதீவு வடக்கு ஆகிய இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் தனித்தனியே இரண்டு பொதுமண்டபங்கள் நிறுவ நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தங்களும் சைச்சாத்திடப்பட்டன.

அனலைதீவு வடக்கில் நிறுவப்பட்ட பொது மண்டபத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. எனினும் அனலைதீவு தெற்கில் ஆரம்பிக்கப்பட்ட பொது மண்டப நிர்மாணிப்புப் பணிகள் மிகவும் மந்தகதியில் நடைபெற்று வருகின்றன.

எனவே, மேற்படி அனலைதீவு தெற்கு பொது மண்டப நிர்மாணிப்பு வேலைகளைப் பொறுப்பேற்ற சம்பந்தப்பட்ட பகுதிக்கான கிராம அபிவிருத்திச் சங்கம் விரைவில் தமது பணியை நிறைவேற்ற வேண்டும் என அனலைதீவு தெற்கு மக்கள் கோரியுள்ளனர்.

# நத்தார் தினக் கொண்டாட்டம்

உடுவில் மகளிர் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு நடத்தும் நத்தார் தினக்கொண்டாட்டம் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)

# திவ்ய ஜீவன சங்க 35 ஆவது வருட பூர்த்தி வைபவம்

யாழ்ப்பாணம், டிசெ.10

திவ்ய ஜீவன சங்கத்தின் நல்லூர் கிளை ஸ்தாபிக்கப்பட்டு 35 வருடங்கள் பூர்த்தி அடைவதை ஒட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை விசேட வைபவங்கள் நடைபெறவுள்ளன.

மாலை 5 மணிக்கு அபிஷேகம், பூஜை, பஜனை, விசேட சொற்பொழிவுகள் என்பன நல்லூர் திவ்ய ஜீவன சங்கத்தில் நடைபெறவுள்ளன.

(ஐ)

# யுத்தநிறுத்தம் அமுலாக்க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டு பதவியேற்ற நிலையில் - முதல் முதலாக நோர்வே அனுசரணையாளர்களைச் சந்தித்துள்ளோம்.

புதிய அரசின் சமாதான முயற்சிகள் தொடர்பான நிலைப்பாடுகள் பற்றியும் நோர்வேத் தரப்பை மீண்டும் அனுசரணைப்பணி வழங்கும்படி புதிய அரசு அழைத்திருப்பது பற்றியும் நோர்வே தெரிவித்தது. இதற்கான செய்தியை நோர்வேத் தரப்பு எமக்கு அதிகாரபூர்வமாக தெரியப்படுத்தியுள்ளது.

**கே:-** அனுசரணைப் பணியை மேற்கொள்ள நோர்வேத் தரப்பு இலங்கை அரசுக்கு சில நிபந்தனைகளை முன்வைத்துள்ளது. அதேபோல, நீங்கள் ஏதாவது நிபந்தனைகளை முன்வைத்தீர்களா?

**ப:-** எங்களைப் பொறுத்தவரையில் நோர்வேயின் அனுசரணைப் பணியை நாம் நிராகரிக்கவில்லை. தொடர்ந்தும் நோர்வேயின் அனுசரணைப் பணியை எமது தலைமைப் பீடம் வரவேற்றிருக்கிறது.

ஆகவே, புதிதாக எந்த நிலைப்பாடுகளையும் முன்வைக்க வேண்டிய தேவை எமக்கு இருக்கவில்லை. ஆனால், அரசதரப்புக்கு எமது சில நிலைப்பாடுகளைத் தெரியப்படுத்தும்படி நோர்வேயைக் கேட்டிருக்கின்றோம்.

**கே:-** உங்கள் அழைப்பின் பேரில் தாம் இங்கு வந்தார் என நோர்வேத் தூதர் கூறுகின்றார். எந்த விடயத்துக்கு முன்னுரிமை கொடுத்துப் பேசுகிறீர்கள்?

**ப:-** நோர்வே தூதர் எம்மை ஏற்கனவே சந்திப்பதற்கான ஒழுங்குகள் இருந்தன. தேர்தல், ஆட்சிமாற்றங்கள் காரணமாக இந்தச் சந்திப்பு பிற்போடப்பட்டது.

இருந்தாலும், இப்போதுள்ள நிலைமைகளை சீராக்க முயற்சிகளை எடுக்கும்படி அவரை வலியுறுத்தியிருக்கின்றோம்.

யுத்தநிறுத்த உடன்பாட்டை அமுலாக்குவதை விரைவுபடுத்த வேண்டும். இதற்கான சந்திப்புகளை ஏற்படுத்த வேண்டும். உடனடியாக யுத்தநிறுத்தச் சூழலைச் சீராக்க வேண்டும்.

உயர்மட்டக் குழுக்கள் சந்திப்பை மேற்கொள்ள வேண்டும். யுத்தநிறுத்த உடன்பாடுதான் - இணக்கப்பாடுதான் - எல்லா நடவடிக்கைகளிலும் அடிப்படை அமைதி முயற்சிகளோ, சமாதான முயற்சிகளோ அனைத்தின் அடிப்படையும் இந்த உடன்பாடுதான்.

இந்த உடன்பாடு பலவீனமுற்று, தகர்ந்து போகும் நிலைக்கு அதை அனுமதிக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அண்மைக் காலத்தில் பொதுமக்கள் மீது இராணுவம் தீவிரமான தாக்குதல்களையும், குழப்பங்களையும், அச்சுறுத்தல்களையும் கடுமையாக்கி வருகின்றது. இந்தப் போக்குத் தொடருமாக இருந்தால் மக்களின் கொந்தளிப்பை எவருமே கட்டுப்படுத்தமுடியாத நிலை தோன்றும்.

ஆகவே, இந்த உடன்பாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைகளை அமுல்படுத்துவதற்குரிய உத்தரவாதங்களைக் கொடுக்கவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் மக்கள் மத்தியில் நம்பிக்கை கட்டி எழுப்பப்படும். மக்கள் மத்தியில் உள்ள பதற்றம், கொந்தளிப்பான சூழல் தணியும். இவற்றை நோர்வேத் தரப்பிடம் சுட்டிக்காட்டியுள்ளோம்.

யாழ்ப்பாணத்தில், அம்பாறையில், மட்டக்களப்பில் நடந்த சம்பவங்கள் குறித்து நோர்வேத் தரப்புக்குச் சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

அப்பாவிப் பொதுமக்கள் மீது இராணுவமும், இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் கும்பல்களும் தொடுக்கின்ற தாக்குதல்களால் மக்கள் ஆத்திரமுற்ற நிலையில் இருக்கிறார்கள். கொந்தளிப்பிற்கான நிலை ஏற்பட்டுள்ளது.

இதைச் சீராக்க ஆயுதக் குழுக்கள் உடனடியாக வெளியேற்றப்படவேண்டும். மக்கள் மத்தியில் திணிக்கப்பட்டுள்ள இராணுவ நெருக்குவாரங்கள் தணிக்கப்பட்டு, இயல்பு நிலையை உடனடியாகக் கொண்டுவருவதற்கு விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். அதன் ஊடாகவே நிலைமையைச் சுமுகமாக்கிக்கொள்ளலாம் என்பதை நோர்வேத் தூதர் ஊடாக அரசுக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.

### கால அவகாசம் வழங்கினோம்

**கே:-** இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அரசு கடுமையான போக்கைக் கடைப்பிடிக்கும் நிலைமையில், நோர்வேயின் அனுசரணைப் பங்களிப்புக்கூட சந்தேகத்துக்கு இடமாக இருக்கும்போது, உங்கள் வேண்டுகோள்...?

**ப:-** எங்களைப் பொறுத்தவரையில், எங்கள் தலைவர் மாவீரர்தின உரையில் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார். நாங்கள் மஹிந்தவின் சிந்தனையிலோ, நிலைப்பாடுகளிலோ நம்பிக்கை கொள்ளாவிட்டாலும் - எமக்கும் அந்தச் சிந்தனைக்கும் இடையில் பாரிய இடைவெளி இருந்தாலும் - புதிய அரசு பதவியேற்று, புதிய தலைவர் வந்திருக்கின்ற சூழ்நிலையில், அவர்களுக்குக் கால அவகாசம் ஒன்றை வழங்கியுள்ளோம்.

அவர்கள் தேர்தல்களுக்காக கடும்போக்கை எடுத்தார்களா? கடும் நிலைப்பாடுகளை எடுத்தார்களா? கடும் போக்குக் கூட்டுக்களை இணைத்துக்கொண்டார்களா? அல்லது உண்மையிலேயே மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை முன்வைப்பதற்கு மனப்பூர்வமாக விரும்புகிறாரா? அல்லது இனவாதக் கூட்டுகளுடன் தனது போக்கைத் தொடரப்போகின்றாரா ? - என்பதையெல்லாம் உறுதியாகக் கண்டறிய வேண்டிய தேவை இருக்கின்றது. அந்த அடிப்படையில்தான் எமது தேசியத் தலைவர் கால அவகாசத்தை வழங்கியுள்ளார். அது ஒரு நீதியான, நியாயமான பக்கம் என்றுதான் எல்லோரும் எடுத்துக்கொள்கிறார்கள்.

தலைவர் சிறுகால அவகாசத்தைப் புதிய அதிபருக்கும், புதிய அரசுக்கும் கொடுத்திருக்கின்றார். இதைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக்கொண்டு, தமிழ் மக்களின் அபிலாஷைகளை புரிந்து கொண்டு, ஒரு தீர்வை முன்னெடுக்க முன்வரவேண்டும். அது குறித்து தலைவர் பிரபாகரன் தெளிவாகத் தமது உரையில் கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன? கடந்த காலங்களில் சமாதான முயற்சிகள் தோற்றுப்போன - பலவீனப்பட்டுப்போன - காரணங்கள் என்ன? இனிவரும் காலங்களில் எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்? மக்களின் அபிலாஷைகள் என்ன? என்பவற்றை எல்லாம் தலைவர் ஆணித்தரமாக எடுத்துக்கூறியுள்ளார்.



நேற்றைய சந்திப்பின்போது...

இந்த அடிப்படையில் அரசுக்கு கால அவகாசமும் கொடுக்கப்பட்டுள்ளது. இதை அவர்கள் பின்பற்றுவார்களா, உரியமுறையில் பயன்படுத்துவார்களா என்பதையெல்லாம் சிறிதுகாலம் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

### இந்தியா குறித்து...

**கே:-** சமாதான முயற்சிகளும், போர் நிறுத்த உடன்பாட்டிலும் எதிர்வரும் காலங்களில் இந்தியாவின் பங்களிப்பு, முன்னெடுப்பு அதிகரிக்கும்படி அறிகுறி தென்படுகின்றது. இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

**ப:-** அறிகுறிகளை வைத்துக்கொண்டு கருத்துச் சொல்லமுடியாது. பொறுப்பு வாய்ந்த பிரதிநிதிகள், மக்களின் பிரதிநிதிகளாக இருக்கின்ற நிலையில் அறிகுறிகள், ஊகங்களை வைத்து நாம் கருத்துக் கூறமுடியாது.

எங்களுக்கு இன்று நோர்வேத் தூதர் தெரிவித்த நிலைப்பாட்டின்படி, கடந்த காலம் போலவே நோர்வேயின் அனுசரணைப் பணியையும், நோர்வேயின் சமாதான முன்னெடுப்புக்கான பங்களிப்பையும் இந்தியா வரவேற்றிருக்கிறது. இம்முயற்சிகளுக்கான பூரண ஆதரவை கடந்த காலங்களில் போலவே வழங்குவார்கள் என இந்தியத் தரப்பினர் வலியுறுத்தியுள்ளனர் என நோர்வேத் தரப்பு எமக்குத் தெரிவித்துள்ளது.

**கே:-** அரசுத்தரப்பில் இருந்து செய்தி எதையும் நோர்வேத் தூதுவர் கொண்டுவருவாரா?

**ப:-** அனுசரணைப் பணியை மீண்டும் தொடரும்படி இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்துள்ளது என்றும், நேரடியாக ஜனாதிபதி தம்மை அழைத்து இதைத் தெரிவித்தார் எனவும் நோர்வேத் தூதுவர் குறிப்பிட்டார். இந்தச் செய்தியை அதிகாரபூர்வமாகக் கொண்டு வந்து எங்களிடம் தெரிவித்துள்ளார்.

**கே:-** அதற்குப் பதில் ஏதும் கொடுத்தீர்களா?

**ப:-** எங்களைப் பொறுத்தவரையில் பதில் கொடுப்பதற்கு ஒன்றும் இல்லை. நாங்கள் ஏற்கனவே நோர்வேயின் அனுசரணையை - கண்காணிப்பு நடைமுறையை - தொடர்ந்து கொண்டிருக்கின்றோம்.

தெற்கில்தான் அவ்விடயத்தில் குழப்பம் ஏற்பட்டது. புதிய அரசு மாறியிருக்கின்றது. இங்கு எந்தச் சூழ்நிலை மாற்றமோ, குழப்பமோ இல்லை.

**கே:-** யுத்தநிறுத்த உடன்படிக்கையைக் கண்காணிக்கும் பொறுப்பிலிருந்து நோர்வேயை அப்புறப்படுத்த தெற்கில் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. அதுபற்றி நோர்வே ஏதாவது தெரிவித்ததா?

**ப:-** அப்படியான செய்தி எதையும் நோர்வேத் தரப்பு எமக்குத் தெரியப்படுத்தவில்லை.

அதிகாரபூர்வமாக அரசு தனது நிலைப்பாடு எதையும் அனுசரணையாளர் ஊடாக எங்களிடம் முன்வைக்கவில்லை. 'அரசு தனது ஒற்றையாட்சிக்குள் தீர்வு' என்ற நிலைப்பாட்டை முன்வைத்தால், எமது நிலைப்பாட்டை ஆணித்தரமாகத் தெரிவிப்போம்.

### விட்ட இடத்திலிருந்து ஆரம்பிக்குமா?

**கே:-** நோர்வேயின் அனுசரணைப் பணி மீள ஆரம்பிக்கும்போது, விட்டஇடத்திலிருந்து பேச்சு ஆரம்பிக்குமா? அல்லது புதிதாகப் பேச்சு ஆரம்பமாகுமா?

**ப:-** நோர்வேயின் உயர்மட்டக் குழுவினர் மிக விரைவில் எமது தலைமைப் பீடத்தைச் சந்திக்கவிருக்கின்றனர். அப்போதுதான் இதுபற்றி விவாதித்து எமது கருத்துகளை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும். இன்று அதைப்பற்றி பேசவில்லை. இலங்கை அரசின் நிலைப்பாட்டை அதிகாரபூர்வமாகத் தெரிவிக்கத்தான் அவர் இங்கு வந்தார்.

**கே:-** யுத்தநிறுத்த உடன்பாட்டின் நெருக்கடி குறித்து அரசு - புலிகளின் உயர்மட்டக் குழு எப்போது சந்திக்கும்?

**ப:-** அந்தச் சந்திப்புக்கான அவசியத்தை வலியுறுத்தியுள்ளோம். தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளோம். இப்போது தீவிரமான வலியுறுத்தலை இன்று வெளிப்படுத்தியுள்ளோம்.

யுத்தநிறுத்தச் சூழல் தகர்ந்து போகும் ஆபத்து மிக நெருக்கமாகிக் கொண்டிருக்கின்றது. அண்மைக்காலத்தில் இராணுவ நெருக்குவாரங்கள், பொதுமக்கள் கொல்லப்படுதல், பொதுமக்கள் - இராணுவம்முறுகல் போன்றவை தீவிரமடைந்து கொண்டிருக்கின்றன.

உடனடியாக - விரைவாக - இருதரப்பின் உயர்மட்டக் குழுவும் நேரடியாகச் சந்தித்து யுத்தநிறுத்த உடன்பாட்டை அமுல்படுத்துவதற்கான - பலப்படுத்துவதற்கான - முயற்சிகளில் தீவிரமாக இறங்க வேண்டியதன் அவசியத்தை மீண்டும் வலியுறுத்தியுள்ளோம்.

### சந்திப்பு சாத்தியமா?

**கே:-** புதிய அரசுடன் இத்தகைய சந்திப்பு இடம்பெறுவதற்கான அறிகுறி இருக்கின்றதா?

**ப:-** அது அனுசரணையாளர்களிடம்தான் நீங்கள் கேட்கவேண்டும். எங்கள் நிலைப்பாட்டை மிகத்தெளிவாகவும், ஆணித்தரமாகவும் எடுத்துக் கூறியுள்ளோம்.

யுத்தநிறுத்த அமுலாக்கம் தொடர்பாக இருதரப்பின் உயர்மட்டக் குழுவும் பேசி உறுதி செய்யவேண்டும். இது அவசியமானது. காலத்தின் கட்டாயமாக அது இருக்கின்றது. இந்தச் சூழ்நிலையைத்தொடர்ந்தும் தக்கவைக்க வேண்டுமாக இருந்தால் உடனடியாக - விரைவாக - இதனைச் செய்யவேண்டும் என்பதை எமது தலைமைப்பீடத்தின் சார்பாக வலியுறுத்தியிருக்கின்றோம்.

**கே:-** அரசு சமாதான முயற்சிகளில் இழுத்தடிப்புப் போக்கைக் கடைப்பிடிப்பது போல் தோன்றுகின்றது. அப்படியானால் தலைவர் கொடுத்த கால அவகாசம் குறுகியதாகி விடுமா?

**ப:-** நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என நினைக்கிறேன். தலைவர் தெளிவாக அதற்குப் பதில் கூறியிருக்கிறார். அந்தக் கால அவகாசத்தைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் இலங்கை அரசுத்தலைமையும், படைத்தரப்பும்தான். நிலைமைகளை சீர்கெடுத்து, இழுத்தடித்து, சிக்கலுக்குள்ளாக்குவதா என்பது அரசின் கைகளில்தான் தங்கியுள்ளது.

ஆகவே, அரசு தீர்க்கமான முடிவை விரைவாக எடுத்து, சந்தர்ப்பத்தைச் சரியாகப் பற்றிப்பிடிக்கவேண்டும் என்பதுதான் எங்களுடையதும், மக்களுடையதும், அனைவரதும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

### யாழ்ப்பாண நிலைமை

**கே:-** யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் பிரசன்னம் அதிகரித்துள்ளது. இதனால், உருவாகியுள்ள பதற்றநிலை குறித்துப் பேசினீர்களா?

**ப:-** இன்றைய சந்திப்பில் அதிகநேரம் யாழ்ப்பாண நிலை குறித்து எடுத்துக்கூறினோம். யாழ்ப்பாணத்திலும், தமிழீழத்தின் ஏனைய பகுதிகளிலும் இராணுவ வன்முறைகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதையும், தமிழ் மக்கள் மீதான இராணுவ நெருக்குவாரங்கள் அதிகரிக்கப்பட்டிருப்பதையும் கொலைகள், கொலை அச்சுறுத்தல்கள் குறித்தும் எடுத்துவிளக்கியுள்ளோம்.

அப்பாவிப் பொதுமக்கள் எந்தவித காரணமுமின்றி சுட்டுக்கொல்லப்படுவதும், தாக்கப்படுவதும், அச்சுறுத்தப்படுவதும் தொடர்ந்து நடக்கின்றன.

இவற்றின் வெளிப்பாடாகத்தான் இராணுவத்துக்கும் பொது மக்களுக்கும் இடையிலான முறுகல் நிலையும், மோதல் நிலையும் உருவாகியிருக்கின்றன. இதை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமானால், யுத்தநிறுத்த உடன்பாட்டை நாம் நோக்கவேண்டும். அதன் அமுலாக்கலில், அதற்கான வழிமுறைகள் அடக்கப்பட்டிருக்கின்றன.

அவற்றை நடைமுறைப்படுத்தினால் அமைதி திரும்பும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

கிழக்கில் ஆயுதக்குழுக்களைச் சேர்ந்த இருவர் அவர்களைத் தாக்கிவிட்டு எம்மிடம் சரண் அடைந்துள்ளனர். அவர்கள் சரணடைந்தமையை வைத்துக்கொண்டு அவர்களது உறவினர்களை மிருகத்தனமாகப் பழி வாங்கியிருக்கிறார்கள். இப்படியான செயலை இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் இந்த ஆயுதக் கும்பல் செய்தது என்பதையும், இராணுவம் அதில் இணைந்து நின்றது என்பதையும் எல்லோரும் அறிவர். இச்சம்பவம் எமது பொதுமக்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இது மோதல் நிலைகளைத் தீவிரப்படுத்தும் நிலைமையைத்தான் கொண்டுவரும்.

இதற்கு உடனடியாக முடிவு காணப்படவேண்டும் என்று கூறியுள்ளோம்.

**கே:-** யாழ். இராணுவத் தளபதிக்கும், புலிகளின் யாழ். அரசியல்துறைப் பொறுப்பாளர்களுக்கும் இடையில் ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்பு நிறுத்தப்பட்டது. இது குறித்து..?

**ப:-** இந்தப் பேச்சு இடம்பெறாத அதிர்ச்சியையும் இன்று நோர்வேயிடம் தெரிவித்தது.

யாழ்ப்பாணத்தில் முறுகல் நிலை ஏற்பட்டு மோதல் தீவிரமடைந்த நிலையில் எமது பொறுப்பாளர் இராணுவத் தளபதியைச் சந்திக்க உடன் அனுமதி வழங்கி ஏற்பாடுகள் செய்தோம். இந்த நிலையில் இறுதி நேரத்தில் அந்தச் சந்திப்பை அவர்கள் (இராணுவத்தினர்) உதாசீனப்படுத்தி, ரத்துச் செய்தனர்.

இருதரப்பினரும் சந்தித்துப் பேசவேண்டும் என்று கண்காணிப்புக்குழு, நோர்வே தரப்பு ஆகியன அடிக்கடி கூறுகின்றன. ஆனால், அங்குள்ள படைத்தரப்பால் அது நிராகரிக்கப்பட்டுள்ளது. இதை நோர்வேத்தரப்புக்கு கூறியுள்ளோம்.

### உடன்பாட்டை திருத்த முடியாது

**கே:-** யுத்தநிறுத்த உடன்பாட்டில் மாற்றம் செய்யவேண்டும் என்று அரசுத்தரப்பு கூறுகின்றது. இதைப் புலிகள் ஏற்பார்களா?

**ப:-** அதிகாரபூர்வமாக நோர்வே அனுசரணையாளர் ஊடாகவோ, வேறு வழிகள் ஊடாகவோ எமக்கு இது விடயமாக அறிவிக்கப்படவில்லை. ஊடகங்கள் மூலமே அதுபற்றிக் கேள்விப்படுகின்றோம்.

அதாவது, இந்த யுத்தநிறுத்த உடன்பாடு என்பது நீண்டகால முயற்சிக்கு ஊடாக கொண்டு வரப்பட்ட ஒரு நடைமுறைச் சாத்தியமான உடன்பாடு. இதை மாற்றியமைப்பது என்பது எவ்விதத்திலுமே சாத்தியமற்றது. தெளிவாக - இருதரப்புகளுமே நீண்டகாலமாக விவாதித்து - எடுத்த தீர்மானமாகவே இது இருக்கின்றது.

உடன்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளை நடைமுறைப்படுத்தினாலேயே எல்லா நிலைமையையும் சுமுகமாக்கலாம்.

யுத்தநிறுத்த உடன்பாட்டை மாற்றியமைப்பது என்பதைவிட உடன்பாட்டை அமுலாக்கம் செய்வதுதான் இன்றைய காலத்தின் தேவையாக இருக்கிறது.

இதில் நோர்வேயும், கண்காணிப்புக் குழுவும் ஈடுபட்டிருக்கின்றன. ஆனால், அரசுத் தரப்பில் இருந்து வருகின்ற எதிர்மறையான கருத்துகள் எந்தவிதத்திலும் நடைமுறைச் சாத்தியமானவையல்ல. அது அதிகார பூர்வமான கருத்தா என்பதைக்கூட உறுதிப்படுத்த முடியாதிருக்கிறது.

**கே:-** மாற்றம் ஒன்றைப் புலிகள் விரும்புகிறார்களா?

**ப:-** உடன்படிக்கையை மாற்றியமைப்பது என்பதை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்; அதை விரும்பவும் மாட்டார்கள். - எனக் கூறினார். (உ-3)

# OLD BOYS' ASSOCIATION OF ST.PATRICK'S COLLEGE, JAFFNA

## நத்தார்ப் பெருவிழா ஒன்றுகூடல்

29.12.2005

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கமும், யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட கல்லூரி பழைய மாணவிகளும் இணைந்து நடத்தும் நத்தார்ப் பெருவிழா ஒன்றுகூடல் வழமை போல் **2005 மார்கழி 29 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.**

இவ்வைபவத்தில் உறுப்பினர்கள் தங்கள் குடும்பத்தினருடன் தவறாமல் பங்குபற்றி நத்தார்ப் பெருவிழாவைச் சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். இதற்கான தங்கள் பெயர்ப்பதிவையும் ஏனைய விவரங்களையும் கௌரவ பொருளாளர் திரு. J.சிறில் அல்லது கௌரவ செயலாளர் ஆகியோரிடம் உடனடியாகப் பதிவுசெய்து கொள்க.

இல.59, புனித பத்திரிசியார் வீதி,
யாழ்ப்பாணம்.
09 -12 - 2005

**சோதி மரியதாஸ்,**
கௌரவ செயலாளர்
S.P.C- O.B.A.

(43823)(39-26-19-14)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும், நன்றி நவிலலும்

தாயின் மடியில்
08 - 04 - 1954



இறைவன் அடியில்
10 - 11 - 2005

### அமரர் ஆறுமுகம் கணேஸ்

*"நல்லன நினைத்து நல்லன பேசி நல்லன செய்து*
*குற்றம் மறைத்து குணந்தனைப் போற்றி*
*அன்பால் அணைத்து பண்பால் உயர்ந்து*
*உற்றார் ஊரார் உள்ளத்தில் நிலைத்த*
*எங்கள் அப்பாவே அன்புத் தெய்வமே*
*எந்நாளும் உங்கள் நினைவுதானே எமக்கு"*

கடந்த 10.11.2005 இவ்வுலக வாழ்வை நீத்து இறையடி சேர்ந்த எமது அன்புத் தந்தையாரது மறைவுக்கு அனுதாபத்தையும் பலவழிகளில் பங்களிப்பு ஆற்றிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் இன்று (10-12-2005) சனிக்கிழமை எமது இல்லத்தில் நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!!

*கச்சாய் தெற்கு,*
*கொடிகாமம்.*
*(கச்சாய்ச்சந்தி)*

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

(43831)(26-19-14)

---

## தேவை

*பட்டயக்கணக்காளர்கள் நிறுவனமொன்றிற்கு கணக்காளர், பயிலுநர்கள், வேறு பணியாளர்கள் தேவை. தேவைப்படின் தங்குமிட வசதி வழங்கப்படும். உடன் விண்ணப்பிக்கவும்.*

140, பலாலி வீதி, திருநெல்வேலி.
தொடர்பு: 021 222 2478

(43828)(26-19-14)

---

## விற்பனையாளர் தேவை

*பாடசாலை உபகரணங்களை வாகனத்தில் கொண்டு சென்று விற்பதற்கு A/L படித்த விற்பனையாளர் தேவை. சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர் விரும்பத்தக்கது.*

தொடர்பு: தொ.பே.021 222 6678
0777 550886

(43830)(26-19-14)

---

## உதவிப்பணம் கோரி விண்ணப்பித்தவர்களுக்கு தற்காலிகக் கொடுப்பனவு

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் கோரி விண்ணப்பித்தோருக்கு விரைவில் தற்காலிகக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

மேற்படி கொடுப்பனவை வழங்குவதற்கென வடக்கு - கிழக்கு மாகாண சமூக நலத் திணைக்களப் பணிப்பாளர் இரண்டு லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார் என்றும் -

உரிய பயனாளிகள் தத்தம் கிராம அலுவலரிடம் அல்லது பிரதேச செயலக சமூகசேவை அலுவலரிடம் கொடுப்பனவுப் பத்திரத்தைப் பெற்றுத் தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும்- அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-75)

## தளபாடக் கொள்வனவுக்கு நிதி கிடைத்தது

அரியாலை,டிசெ.10

கொழும்புத்துறை ஜே/61, ஜே/62 ஆகிய கிராம சேவையாளர் பிரிவின் சமுர்த்தி செயலணி, கொழும்புத்துறை சனசமூக நிலையப் பாலர் பாடசாலையின் தளபாட வசதிக்கென ஒரு லட்சத்து இரண்டு ஆயிரம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது என்று செயலணியின் தலைவர் யோ.சுபநேசன் தெரிவித்தார்.

ஒதுக்கப்பட்ட நிதிக்கான தளபாடங்களை மேற்படி பாலர் பாடசாலைக்குப் பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார். (எ-17)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தின் உபஅதிபரும் விரிவுரையாளருமான திரு.ஞா.கேதீஸ்வரன் அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி ஞானசுந்தரம் இரத்தினேஸ்வரி**

அவர்களின் மறைவினால் ஆழ்ந்த துயரடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனம், வவுனியா.

முதலாம் வருட கூட்டுறவு பயிற்சி நிறுவன மாணவர்கள் ஒன்றியம் (2005/2006)

(43837)(26-19-14)

---

## பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில சிறப்பு வகுப்பு

விடுமுறையில் பிள்ளைகள் SAAMSTECH பாடவிதானம் மூலம் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற அரிய சந்தர்ப்பம்.

ஆரம்பம் : 15.12.2005
காலம் : 3 வாரங்கள்
கட்டணம் : ரூபா 1500/-

காலை மற்றும் மாலை பிரிவுகள். 7 முதல் 10 மற்றும் 11 முதல் 13 ஆம் வகுப்புகளுக்கு தனித்தனி பிரிவுகள். நேரடி வகுப்பும் குழுப்பயிற்சியும் ஒலிப்பயிற்சியும். பாட அலகுகள் இலவசம். பயிற்சி முடிவில் சான்றிதழ்.

### விசேட சலுகை

இன்றும் நாளையும் பதிவு செய்வோருக்கு பாடக்கட்டணம் ரூபா 1000 மட்டும்.

பதிவுகளுக்கு

**SAAMSTECH**
841, Hospital Road, Jaffna 021 - 4591571
233/4, Kasthuriar Road, Jaffna 021 - 2229505

---

FedEx Express அனுசரணையுடன் FedEx Express

## திருமுருகன் கொம் நெற்றின் பரிசு மழை

**05.12.2005 முதல் 15.01.2006 வரை**

எமது நிறுவனத்தின் மூலம் நத்தார், புதுவருட, பொங்கல் தினங்களை முன்னிட்டு உங்கள் உறவுகளுக்கு துரித கதியில் கடிதங்கள், உணவு, உடை, V.D.O பிரதி மற்றும் அன்பளிப்புப் பொருள்களை அனுப்புவோரின் பற்றுச்சீட்டு இலக்கங்கள் குலுக்கலின் மூலம் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பெறுமதிவாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

முதலாம் பரிசு - தங்கநாணயம் மற்றும் பெறுமதிவாய்ந்த 10 ஆறுதல் பரிசுகள்

மற்றும் 20% கழிவு

சுவிஸ்லாந்துக்கான 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 650/=
லண்டனுக்கான 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 500/=

ஐரோப்பிய நாடுகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

### திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (பல்கலைக்கழக கூ.ச முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253

முருகன் தொலைத்தொடர்பகம் 186, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 2027 Fax - 021 222 2993

வாடிக்கையாளர்களுக்காக தினசரி காலை 7.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை எமது சேவை நடைபெறுகின்றது.

யாழ். நகரில் இவை அனைத்தும் திருமுருகன் கொம் நெற்றில் மட்டும்

---



அமரர்
**சின்னர் சண்முகம்**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
21.02.1933

மறைவு
21.12.2004

மனிதரில் மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய்
புனித வாழ்வு வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!
காத்திருந்து அரவணைத்த கைகள்---
காலமெல்லாம் எம்மை விட்டுப் பிரிந்ததேனோ?
மலர்ந்த வதனச் சிரிப்பை வாழ்நாளில்
காணக்கிடைக்குமா?

வன்னேரிக்குளம்,
கிளிநொச்சி.

மனைவி,
பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வைரமுத்து பவளம்



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வைரமுத்து பவளம் நேற்று (09.12.2005) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் கணபதி வைரமுத்து (முன்னாள் ஊழியர், கொக்குவில் கிராம சபை) அவர்களின் அன்பு மனைவியும் சந்திரசேகரம் (கிராம அலுவலர் - கந்தர்மடம் வடமேற்கு J/102), குணநாயகம் (கனடா), வேதநாயகம் (கனடா), புனிதநாயகம் (கனடா), மோகனதாஸ் (கனடா), சுகுணாவதி, நந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவர். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
பிள்ளைகள்,
வை. சந்திரசேகரம் (மகன்).

(சி-46719) (54-11-34-12)

## கதிரேசு கோபால்



சாவகச்சேரி, கற்குழியைச் சேர்ந்த கதிரேசு கோபால் நேற்று (09.12.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அன்னம்மாவின் அன்புக் கணவரும் சரசா, காலஞ்சென்ற சிவனேசன், பத்மா, பாமா, ரகுபதி, ராகினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகேஸ்வரி, சந்திரன், மகேந்திரன், கனகசபை, ரவிநேசன் ஆகியோரின் மாமனும் கலஞ்சென்ற ஜெயக்குமார், ரோமியன், தர்சன், நிறோசிகா, நகோமி, பிறேமஜா, மதுஷா, ராகுலன், சேபா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2005) சனிக்கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நுணாவில் கிழக்கு,*
*கற்குழி,*
*சாவகச்சேரி.*

(சி-46720) (54-11-34-12)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

## சங்கரப்பிள்ளை பொன்னுத்துரை



கட்டுவன், தண்ணீர் தாழ்வைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் மூத்ததம்பி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை பொன்னுத்துரை நேற்று (09.12.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் புத்திரரும் செல்லம்மாவின் அன்புக் கணவரும் தர்மநாயகி, பரமேஸ்வரி, திவ்யராணி, சிவமலர், ஸ்ரீகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் குலசிங்கம், செல்வம், கிருஸ்ணகுமார், மகேந்திரன், கனகாம்பிகை ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.12.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மூத்த தம்பி வீதி,*
*மானிப்பாய்.*

(43853) (54-11-34-12)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## தம்பிராசா லீலாவதி

மூத்த விநாயகர் கோயிலடி, கரணவாய் தெற்கைச் சேர்ந்த தம்பிராசா லீலாவதி காலமாகிவிட்டார்.

அன்னார் தம்பிராசாவின் அன்பு மனைவியும் இன்பவாணி (சுவிஸ்), கலை வாணி (சுவிஸ்), உசாவாணி, சசிலாவாணி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஐஸ்வர்யா, ஆதவன், பாரதி, டிலக்சன் சுஜானி, டிலக்சனா, கேதாரன், மதுசன், சசிஷணா ஆகியோரின் அம்மம்மாவும், புஸ்பராணி, புஸ்பராஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சற்குணராஜா-கமலாம்பிகை தம்பதியரின் பெறாமகளும் சந்திரமதியின் (சுவிஸ்), மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2005) சனிக்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*மூத்தவிநாயகர் கோயிலடி,*
*கரணவாய் தெற்கு,*
*கரவெட்டி.*

(சி-46721) (54-11-34-12)

தகவல்:
க. தம்பிராசா (கணவன்)
(சின்னவெள்ளை).

## இராசகாரி பாலசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற அதிபர்)

தொல்புரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசகாரி பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (09.12.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்புக் கணவரும் சிவபாலன் (கனடா), தனபாலன் (உப பீடாதிபதி (கல்வி), யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி), பாலகௌரி (ஆசிரியை, தியாகராசா மத்திய மகா வித்தியாலயம், காரைநகர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், புஸ்பரதி (கனடா), கர்ணி, சுவேந்திரன் (ஆசிரியர், யாழ்.சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கீரீசன், தரணீசன், ஆர்த்திகா, ஆகீசன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2005) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் வழுக்கையாறு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
பா. தனபாலன் (மகன்)
(உபபீடாதிபதி, யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி)

(சி-46722) (54-11-34-12)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 28.08.1942 உதிர்வு 10.11.2005

### திருமதி தம்பையா கண்மணி

பெற்றெடுத்து...பெயரிட்டு...அமுதூட்டி...அன்பெல்லாம் காட்டி...
எமைவளர்த்த அம்மா...பொல்லாத காலன் உமைக்கவர்ந்து சென்றதினால்
அல்லுறும் எம்சோகம் சொல்லி முடிவதம்மா.. கண்ணை இமைகாப்பதுபோல்
வாழ்ந்த காலமெலாம் எமைக்காத்த எம் கண்மணியே...!
வையகத்தில் நாம் வாழும் காலமெலாம் உம் நினைவு
எம் நெஞ்சில் நிறைந்திருக்கும்!

இன்று(10.12.2005)சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனைநிகழ்வில் கலந்து அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சிவகாந்தா வீதி,*
*அம்மன் கோயிலடி,*
*தையிட்டி.*

(43843) (54-11-34-12)

*த. முகவரி: மாவடி வீதி,*
*எச்சாட்டி வைரவர் கோயிலடி,*
*சுதுமலை தெற்கு.*

கணவன்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

*மலர்வு* 08 - 05 - 1940



*உதிர்வு* 13 - 12 - 2002

அமரர்

### பொன்னன் தர்மலிங்கம்

திதி: 10.12.2005

*அன்பு காட்டி அரவணைத்து அறிவூட்டி*
*இன்பமுடன் இனிதுவாழ வழிகாட்டி*
*என்னை வாழவைத்த தெய்வமே!*
*நீங்கள் மறைந்து போனாலும் உங்கள் நினைவுகள்*
*எந்தன் நெஞ்சத்தை விட்டு நீங்காது.*

*நாவலடி,*
*உடுப்பிட்டி.*

(43852) (54-11-34-12)

பிரிவால் துயருறும்:
த. ஜெயராஜ் (மகன்).

# மரண அறிவித்தல்

## கந்தப்பு சிவகாமி

கரவெட்டி மத்தி, கரவெட்டியை வசிப்பிடமாகக் கொண்ட கந்தப்பு சிவகாமி அவர்கள் நேற்று (09.12.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்புவின் அன்பு மனைவியும் விமலராசா, ஜெயராசா (கொழும்பு), தவராசா (அமரர்), சிவராசா (மாலைதீவு), சுந்தரராசா (கொழும்பு), வில்வராசா (கனடா), நளாயினி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2005) சனிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நவலோகம்*
*நெல்லியடி.*

(46723) (54-11-34-12)

தகவல்:
விமலராசா (மகன்).


Jayoda ஜயோதா ජයෝදා

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7331421 முதல் 7341764 வரை சீட்டிழுப்பு இல. 192 திகதி 08-12-2005

வெற்றி எண்கள் 9 7 6 1 0 4 சுப்பர் எண் 09

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,28,69,850/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,28,69,850/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/- | 4,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 88 | 5,000/- | 4,40,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 894 | 500/- | 4,47,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 8,878 | 50/- | 4,43,900/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 88,017 | 10/- | 8,80,170/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 92 | 1,000/- | 92,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 891 | 100/- | 89,100/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 8,791 | 20/- | 1,75,820/- |
| | | மொத்தம் | 40,62,990/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 46,65,590/- |

இந்த திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 1,31,16,825/-

தொடர் இல. 6415287 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 டிசம்பர் 12 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| பொலன்னறுவை | 7338705-8-20 |
| திருகோணமலை | 7333762-4-37 |
| புத்தளம் | 7338339-6-74 |
| கொழும்பு | 7338503-3-94 |
| களுத்துறை | 7339477-6-03 |
| கேகாலை | 7338314-7-03 |
| கொழும்பு | 7338884-0-80 |
| அம்பாறை | 7335952-3-32 |


### தொலைபேசி இணைப்பு

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலைக்கு கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் தொலைபேசி இணைப்பு வழங்கப் பட்டுள்ளது.

யாழ். சுகாதார சேவை பிரதிமாகாணப் பணிப்பாளர் புங்கர் ஆகேதீஸ்வரன் இதற்கான நிதியை யாழ். ரெலிகொம் நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கியிருந்தார்.

இதனையடுத்து புதிதாக தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(எ-135)


## COLLEGE OF ENGLISH

பிறவுண் வீதி, யாழ்.
புதிய பிரிவுகள் இன்று ஆரம்பம்
SPOKEN ENGLISH
Sat., Sun., 4.30
Gr.6,7,8,9,10, O/L, A/L.
ENGLISH Special Class
By: T. Thanendran
(43851)
அனுமதி நேர அட்டவணை 3 மணிமுதல் பெறலாம்.

## ஓவ்செட் மெசின் மைன்ரர் தேவை

ஓவ்செட் மெசின் (கமடா) மைன்ரர், கம்பியூட்டர் ரைப் செற்றிங்காளர் அனுபவம் உள்ளவர்கள் உடன் நேரில் வரவும்.

தயா அச்சகம்
138, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(மனோகராச் சந்தி) (43849) (54-11-34-12)

## மனோகரா யாழ்ப்பாணம்



7ஆவது வெற்றி வாரமாக இளைய தளபதி விஜய்,அசின்,பிரகாஷ்ராஜ் நடித்த
சிவகாசி
கா.நே:10.30,2.30,6.30,9.30(பு.நே)
9ஆம் திகதி முதல்
காலை 10.30 காட்சியாக சிவகாசி
1.30,4.30,7.30,10.30 காட்சியாக சூரியா, திரிஷா வடிவேல் நடித்த
ஆறு
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
9 ஆம் திகதி முதல் புதிய நேரப்படி புதிய காட்சி நேரம்
காலை 10.30, மதியம் 1.30, மாலை 4.30, இரவு7.30,10.30

## ராஜா யாழ்ப்பாணம்

ஸ்ரீகாந், நமீதா, வடிவேல்
நடித்த
பம்பர கண்ணாலே
காட்சிநேரம்: பு.நே.
10.30, 2.30, 6.30 மட்டும்
(46404)

## நாகம்ஸ் சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடாக
அர்ஜுன், நமிதா,
வடிவேல் நடித்த
ஆணை



தினசரி: புது நேரம் 11.00, 3.00, 7.00,10.00

## நாதன்ஸ் யாழ்ப்பாணம்

பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க
தற்காலிக புதிய நேரமாற்றம்
10.30, 1.30,4.30, இரவு 7.30
இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு



ABCD
ஷாம்,சினேகா
அபர்ணா
நடித்த

# தமிழ் - முஸ்லிம் உறவைச் சீர்குலைக்கப் பெரும் சதி!
# அதற்கு இடங்கொடாதீர் எனப் பிரபாகரன் வேண்டுகோள்

கிளிநொச்சி, டிசெ.10

"தமிழ் - முஸ்லிம் மக்களிடையேயான உறவைச் சீர் குலைக்கப் பெரிய சதி நடக்கின்றது. அவசரப்பட்டு, உணர்ச்சி வசப்பட்டு இந்தச் சதி நடவடிக்கைகளுக்கு யாரும் பலியாகி விடக்கூடாது."

"இதனைப் புலிகளின் தலைமைப்பீடத்தின் சார்பில் முஸ்லிம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் ஒரு வேண்டுகோளாக நான் முன் வைக்கிறேன். "

- இப்படித் தெரிவித்திருக்கின்றார் விடுதலைப்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.

நேற்று கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரை கிளிநொச்சியில் சந்தித்துப்பேசிய பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தமிழ் - முஸ்லிம் உறவு குறித்து அப்போது அவர் தெரிவித்ததாவது:-

✱ கே:- கிழக்கிலும், யாழ்ப்பாணத்திலும் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் சில சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இது குறித்து......?

• ப:- தற்சமயம் முஸ்லிம் - தமிழ் மக்கள் மத்தியில் உறவு நிலையைச் சீர்குலைப்பதற்கு பெரிய சதி நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன என்பதை நாங்கள் உணர முடிகிறது. இவற்றை முடிவுக்குக் கொண்டு வந்து, தமிழ் -முஸ்லிம் மக்களிடையே நல்லுறவைக்கட்டி எழுப்பவேண்டும் என்பதுதான் எமது தலைமைப்பீடத்தின் விருப்பமாக இருக்கின்றது.

அண்மைய நாள்களில் கிழக்கு முஸ்லிம் சம்மேளனம் வேண்டுகோள் ஒன்றை அனுப்பியிருந்தது. உண்மையில் எமது தலைவர் அதை உடனடியாகக் கவனத்தில் எடுத்து, எமது மாவட்ட இராணுவ மற்றும் அரசியல் தலைமைகளுக்குபணிப்புகளை விடுத்துள்ளார். உடனடியாக முஸ்லிம் தூதுக்குழுக்களைச் சந்தித்து நிலைமைகளைத் தெளிவுபடுத்தி தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையிலான உறவு நிலையை இறுக்கமாக்குவதற்கும், இந்தச் சதியின் பின்னணியிலுள்ள சக்திகளை இனங்காண்பதற்கும் அனைத்துத் தரப்பினரையும் ஒன்றுபடுத்தி தீவிரமாக செயல்படும்படியும் எமது தலைவர் வலியுறுத்தியுள்ளார். அந்த உத்தரவுகள், பணிப்புகள் மாவட்ட இராணுவ, அரசியல் தலைமைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவர்கள் அந்த முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

உண்மையில் முஸ்லிம் மக்களைப் பொறுத்த வரையில், முஸ்லிம் மக்களிடையே ஒரு பதற்றத்தை ஏற்படுத்தி, குழப்பத்தை உருவாக்கி, முஸ்லிம் - தமிழ் மக்கள் மத்தியில் விரிசல்களைத் தோற்றுவித்து, அதன்மூலம் நன்மைதேட பல சக்திகள் முயன்று கொண்டிருக்கின்றன.

முஸ்லிம் மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் வேண்டுகோள் ஒன்றை விடுக்க விரும்புகிறோம். எமது தலைமைப்பீடத்தின் சார்பில் இதை விடுக்கிறோம்.

அவசரப்பட்டு, உணர்ச்சி வசப்பட்டு, இந்தச் சதி நடவடிக்கைகளுக்கு யாரும் பலியாகி விடாது, நிதானமாக - பொறுமையாக - உண்மை நிலைகளைக் கண்டறிந்து செயல்படுமாறு வேண்டுகிறோம்.

இந்தச் சம்பவத்தில் சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து அடுத்தகட்ட நடவடிக்கைகள் பற்றித் தீர்மானிக்கக் கால அவகாசம் இரு தரப்பிற்கும் தேவை.

மாவட்ட மட்டத்தில் முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்து, நிலைமைகளைச் சுமுகமாக்கும்படி எமது பொறுப்பாளர்களைக் கேட்டிருக்கிறோம்.

தமிழீழத்தில் அனைத்துப் பகுதியிலும் வாழும் முஸ்லிம் மக்களுக்கும் அநாமதேய மிரட்டல்களை சிலர் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதை முஸ்லிம்மக்கள் எந்த வகையிலும் பொருட்படுத்தத் தேவையில்லை.

வேண்டுமென்று, திட்டமிட்டு செயல்படும் சதிச்செயல் இது. ஆகவே, முஸ்லிம் மக்கள் எந்தவிதப் பதற்றமும் அடையத்தேவையில்லை.

தமிழ் - முஸ்லிம் மக்கள் இந்தத்தாயகத்தில் சுதந்திரமாக - நிம்மதியாக - கௌரவமாக - ஒற்றுமைப்பாட்டுடன் வாழுகின்ற சூழலை உருவாக்கத்தான் தமிழீழ விடுதலைப் புலிகளும் அதன் தலைமையும் அர்ப்பணித்து போராட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தவகையில் முஸ்லிம் மக்கள் எந்த விதமான பதற்றமும் அடையத்தேவையில்லை. அதேபோன்று தமிழ் மக்களும் எந்தவித முரண்பாடுகளும், குரோத உணர்வுகளும் வளராமல் தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் நல்லுறவைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் பாடுபடவேண்டும். எமது தலைமைப் பீடத்தின் சார்பாக இதை வலியுறுத்த விரும்புகிறேன்.

யாழ்ப்பாணம் உட்பட ஏனைய பகுதிகளில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு மிரட்டல் போயிருப்பதாக அறிகின்றோம். இதை வன்மையாக நாம் கண்டிப்பதுடன் மட்டுமல்லாமல் இத்தகைய செயல்களுக்குக் காரணமான சூத்திரதாரிகளை இனங்காண்பதற்கும் முழு அளவில் தீவிரமாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

இந்த விடயங்களை முடிவுக்குக் கொண்டு வர அனைத்துத் தரப்பினதும் ஒத்துழைப்பையும் நாங்கள் கோருகின்றோம். (ஐ-க-3)

### நிபந்தனை விவகாரத்தை வெளியிட்டதற்காக
## நோர்வேயை அழைத்து விளக்கம் கோர இலங்கை அரசு தீர்மானம்

கொழும்பு,டிசெ.10

அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கு மிடையில் அமைதி முயற்சிகளுக்கான அனுசரணைப் பணியை மீள ஆரம்பிப்பதற்கு நோர்வே முன் நிபந்தனை விதித்திருக்கும் விடயத்தை ஊடகங்களுக்கு வெளிப்படுத்தியதற்காக அமைதி முயற்சிகளுக்கான நோர்வே அனுசரணையாளர்களிடம் விளக்கத்தைக் கோருவதற்கு இலங்கை அரசு தீர்மானித்திருப்பதாக அரச உயர்மட்ட வட்டாரங்கள் நேற்றிரவு 'உதயனு'க்குத் தெரிவித்தன.

இதன் பொருட்டு எதிர்வரும் வாரத்தின் முற்பகுதியில் கொழும்பிலுள்ள நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் வெளிநாட்டமைச்சுக்கு அழைக்கப்படவுள்ளாரென்றும், அங்கு அவரிடம் விளக்கம் கோரப்படுமென்றும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

இலங்கை அமைதி முயற்சிகளில் அனுசரணைப் பணியை முன்னெடுக்குமாறு கடந்த புதன்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கொழும்பிலுள்ள நோர்வேத் தூதுவர் ஊடாக நோர்வே அரசை உத்தியோகபூர்வமாகக் கோரியிருந்தார். அதேசமயம் அன்றைய தினம் இரவு பி.பி.ஸி.யின் சிங்கள சேவையான 'சந்தேசிய' விற்கு செவ்வியொன்றை வழங்கிய நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும், அமைதி முயற்சிகளுக்கான விசேட தூதருமான எரிக் சொல்ஹெய்ம், சில நிபந்தனைகளின் அடிப்படையில் இலங்கையின் அமைதி முயற்சிகளை முன்னெடுக்க நோர்வே தீர்மானித்திருப்பதாக தெரிவித்தார்.

நோர்வே அனுசரணையாளர்களின் இந்த அறிவிப்பு ஜனாதிபதி மஹிந்தவிற்கு பெரும் அதிருப்தியையும், விசனத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது எனக் கூறப்படுகிறது.

அனுசரணையாளர்களின் நிபந்தனைகளுக்கு அடிபணிவதா என்பது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்தவிற்கு ஆதரவான கூட்டுக் கட்சிகளின் அழுத்தத்தால் கொதிப்படைந்து போயிருக்கும் ஜனாதிபதி, இது விடயத்தில் நோர்வேத் தூதுவரிடம் விளக்கமொன்றைக் கோருமாறு வெளிவிவகார அமைச்சரைப் பணித்திருக்கிறாரென அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஐ-க)

### அனுசரணைப்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் ஊடகங்களுக்கான பேட்டி ஒன்றில் உறுதிப்படுத்தியிருந்தார்.

நோர்வே அனுசரணைப் பணியை ஆரம்பிப்பதனால், அவ்விடயத்தில் நோர்வேயின் செயற்பாட்டை பக்கச்சார்பானது என்றும், புலிகளுக்காகச் செயற்படுகின்றது என்றும் குறைகூறுவதை இலங்கை அரசுத் தரப்பும், அதனோடு கூட்டமைத்துள்ள கட்சிகளும் நிறுத்தவேண்டும் என நோர்வே இலங்கை அரசுத் தரப்புக்கு நிபந்தனை விதித்திருக்கின்றது.

"அனுசரணை விவகாரம் தொடர்பாக நோர்வேயின் எதிர்காலப் பங்களிப்புக் குறித்து இலங்கையில் அரசியல் மட்டத்தில் கலந்துரையாடல் நடத்தப்படவேண்டும்." - என நோர்வே தனது அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது இதைத்தான்.

இலங்கை அரசு தனது தரப்பு அரசியல் கட்சிகளுடன் பேசி, தீர்க்கமான ஒரு முடிவுக்கு வந்து, தெளிவுபடுத்திய பின்னர் - பக்கச்சார்பின்றி செயற்படும் நோர்வேயை தவறாக விமர்சிப்பதில்லை என்ற முடிவுக்கு வந்த பின்னர் - அதைத் தெரியப்படுத்தினால் நோர்வே தனது அனுசரணைப் பணியை மீள ஆரம்பிக்கும் என்பதே நோர்வேயின் நிலைப்பாடாக உள்ளது.

இதேபோன்ற நிபந்தனை ஒன்றை நோர்வே புலிகள் தரப்புக்கும் விதித்திருப்பதாக ஒஸ்லோ வட்டாரங்கள் தெரிவித்தன.

அனுசரணைப் பணி தொடர்பான விடயங்களில் புலிகளின் தலைமையுடன் ஊடாட்டம் வைத்து, தொடர்புகளைப் பரிமாறி, விடயங்களைத் தீர்த்துக்கொள்வதற்கு இலகுவான மார்க்கம் ஒன்றைப் புலிகள் உறுதிப்படுத்த வேண்டும் என்பதே புலிகளுக்கு விதிக்கப்பட்ட நிபந்தனை என்றார் நோர்வேத் தரப்பின் அதிகாரி ஒருவர். (ஐ-க)

### பானுஸ்..
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கு கரை ஊடாக்க் கரையைக் கடந்து கொண்டிருந்தது என்று வானிலை அவதான நிலையத் தகவல்கள் தெரிவித்தன.

கடும் புயல் வீசலாம் என்று எதிர்வு கூறப்பட்டிருந்ததால் யாழ்.குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில் மக்கள் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தனர். மீனவர்களைக் கடலுக்குப் போகவேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

புயல் அபாயம் பற்றிய தகவலைக் கொழும்பில் உள்ள காலநிலை அவதானிப்பு நிலையம் நேற்றுப்பகல் யாழ்.மாவட்ட அரச அதிபருக்குத் தெரியப்படுத்தியிருந்தது. இத்தகவலை அரச அதிபர் பின்னர் ஊடகங்களுக்கும் உள்ளூர் அரச அதிகாரிகளுக்கும் வழங்கியிருந்தார்.

நேற்றுப் பின்னிரவு முழுவதும் பலத்த காற்று வீசிய போதிலும் அதனால் ஏற்பட்ட சேதங்களை உடனடியாக அறிந்துகொள்ள முடியவில்லை.

புயல் அபாயம் பெரும்பாலும் அதிகாலை 5.30 மணிக்குப் பின்னரே முற்றாக நீங்கும் என்று அவதானிகள் தெரிவித்தனர். (ஐ-6-7-70-190)

## புலிகளே தாக்குதல் நடத்துகின்றனர் சூத்திரதாரிகளை மடக்கிப் பிடிப்போம்!
### அடித்துக்கூறுகிறார் இராணுவத் தளபதி

வடக்கு, கிழக்கின் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இப்போது அரசியல் பணிகளில் ஈடுபடாத விடுதலைப் புலிகள், முன்னரே அந்தப் போர்வையில் உள்ளே புகுந்து இப்போது ஆங்காங்கே தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். நாம் இதனை நீடிக்கவிடமாட்டோம். சூத்திரதாரிகளை மடக்கிப்பிடித்து அமைதியை ஏற்படுத்துவோம்.

- இவ்வாறு காட்டமாகக் கூறினார் இராணுவத்தளபதி லெப்டினண்ட் ஜெனரல் சரத் பொன்சேகா. அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் இப்போது அடிக்கடி தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்தச் சம்பவங்களில் தங்களுக்குத் தொடர்பில்லையென புலிகள் கூறினாலும், அவர்களுக்கு தொடர்பு இருப்பதாகவே நாம் கூறுகிறோம். அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகத் தெரிவித்தே புலிகள் யாழ்ப்பாணத்திற்கு வந்தனர். அவர்களின் படையொன்று கிளிநொச்சியில் இருக்கிறது. ஆனால், இப்போது, அரசியல் நடவடிக்கையில் ஈடுபடாதிருக்கும் புலிகள் அந்தப் போர்வையில் கிளிநொச்சியிலிருந்து குடாநாட்டிற்கு அடிக்கடி வந்து போகின்றனர். இந்தக் காலகட்டத்தில் அவர்களில் ஒரு சிலரே இவ்வாறான தாக்குதல்களை நடத்துகின்றனர்.

இது தொடர்பில் நாம் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் விரிவாகப் பேசவுள்ளோம். இவ்வாறானவற்றைத் தடுக்கத் திட்டமொன்றையும் வகுத்திருக்கிறோம். தாக்குதல் நடத்துவோரைக் கண்டுபிடிப்போம்.

- இவ்வாறு இராணுவத்தளபதி மேலும் கூறினார். (ஐ-க)

### யுத்தம் வராது....
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கின்றோம். அதற்காக நாங் கள் யுத்தத்தை எதிர்பார்த்திருக்கின்றோம் என்று அர்த்தம் அல்ல." - என்றார் கூட்டுப் படைகளின் தளபதி சந்தகிரி.

"புலிகள் யுத்தத்துக்குத் திட்டமிடுகின்றார்கள் என்பதற்கு ஆதாரம் எதுவும் எம்மிடம் இல்லை. ஆனால், யுத்தம் வருமானால் களத்தில் புலிகளைத் தோற்கடிக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம். நாங்கள் மேலான நிலையில் இருக்கின்றோம் என்பதுதான் யதார்த்தம்." - என்றார் அவர்.

"எங்களை ஆத்திரமூட்டும் புலிகளின் செயல்களுக்கு நாங்கள் இலகுவில் எடுபட மாட்டோம்." - என்றார் அவர்.

"யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற தாக்குதல்களில் 13 படையினர் கொல்லப்பட்டனர். அது யுத்தம் அல்ல. பயங்கரவாதச் செயல். அதனால் படையினர் பதற்றம் அடைந்துவிடப் போவதில்லை." - என்றார் சந்தகிரி.

தங்களின் போக்குவரத்து மற்றும் வான் வெளித் தாக்குதல் பிரிவுகள் தேவைப்பட்டால் பணியை முன்னெடுக்கத் தயாராக இருப்பதாக விமானப்படைத்தளபதி அங்கு சொன்னார்.

அண்மைய நாள்களில் வடக்கு - கிழக்கில் ஏற்பட்ட சம்பவங்களில் 18 படையினர் உயிரிழந்திருந்தனர். இதனால் விரைவில் யுத்தம் வெடிக்கும் என்ற அச்சநிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

இந்தப் பின்னணியில் நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாகத் தமது அரசினது நிலைப்பாட்டை நாட்டு மக்களுக்கும் உலகுக்கும் தெளிவுபடுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரும்பியதால், இந்தப் பத்திரிகையாளர் மாநாடு நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது. (ஐ-க)

### யாழ்.நகரில்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பறை முழங்க ஒப்பாரி பாடியவாறு மாணவர்கள் இந்த மரண ஊர்வலத்தை நடத்தினர். ஒரு மாணவன் கொள்ளிக்குடத்தைத் தாங்கியிருந்தான். பிற்பகல் 3 மணியளவில் நகரின் மத்தியில் ஆஸ்பத்திரி வீதிக்கு - கொண்டுவரப்பட்ட கொடும்பாவி தகனக்கிரியை செய்வது போன்ற ஏற்பாடுகளுடன் எரிக்கப்பட்டது. பின்னர் மாணவர்கள் அப்பகுதியில் இருந்து அமைதியாகக் கலைந்து சென்றனர். (ஐ-12)

### பொலீஸாரின்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அணிந்தவாறு வந்த இருவர் பொலீஸாரைத் தாண்டி நாவலர் வீதி வழியே செல்ல முயன்ற போது பொலீஸார் அவர்களை நிறுத்துமாறு சைகைகாட்டினர்.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் நிற்காமல் வேகமாகச் செல்லவே பொலீஸார் வானத்தை நோக்கி சரமாரியாக எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பதற்றம் ஏற்பட்டது. சிறிது நேரம் வீதிகள் வெறிச்சோடிக்காணப்பட்டன. (ஐ-7)


10 ஆவது ஆண்டில்...

**எவலற் கல்வி நிறுவனம்**

147, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கல்வியாண்டு-2006
தரம் 3 முதல் O/L வரை
ஆரம்பம் 12.12.2005
திங்கள் பி.ப. 3 மணி
அனுமதிகளை டிசெம்பர் 10 இல் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.
(43572) (30-16-12)

**றெறாசோ மாபிள் சிப்ஸ், வெள்ளை சிமெந்து**

மற்றும் மூலப்பொருள்கள் கொழும்பு விலையில் விற்கப்படுகிறது. நீண்டகால மாபிள் தொழில்நுட்பத்தின் முன்னோடிகள்

'மாபிள்ஸ்'

42, நவீன சந்தை, யாழ்ப்பாணம். T.P.222 2328 (43818)
கண்டாமை, தொல்புரம். T.P.222 5286
★ தரமான றெறாசோ தரைப்பதிப்புவேலை கால அவகாசத்தில் ஏற்கப்படும்.

**ENGLISH MEDIUM**
Grade 6,7,8,9, Class
தரம் 4முதல் 11 வரையான வகுப்புகள் தரம் 05 புலமைப் பரிசில் - 2006
புதிய பிரிவுகள் ஆரம்பம்
10.12.2005
இன்று மாலை 4 மணி
திகழ் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ்.வீதி,இணுவில்



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.12.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.